


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 230 02.04.2026 வியாழக்கிழமை

Chennai Volume: 01 Issue: 230 Thursday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(02-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-19
பிறை: வளர்பிறை
திதி
பௌர்ணமி காலை 7.57 வரை பிறகு பிரதமை.
நட்சத்திரம்:
அஸ்தம் மாலை 5.45 வரை பிறகு சித்திரை
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00–7.30 மணி.
சூலம் – தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | நிம்மதி |
| ரிஷபம் | தெளிவு |
| மிதுனம் | பாராட்டு |
| கடகம் | அமைதி |
| சிம்மம் | லாபம் |
| கன்னி | நன்மை |
| துலாம் | செலவு |
| விருச்சிகம் | வெற்றி |
| தனுசு | அமைதி |
| மகரம் | பரிவு |
| கும்பம் | பணிவு |
| மீனம் | ஒய்வு |

# திருச்சி கிழக்கு தொகுதியில் நடைபயிற்சியின்போது வாக்கு சேகரித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**திருச்சி, ஏப்.2:**

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந் தேதி நடக்கிறது. இந்த தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை சமீபத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதன்படி கொளத்தூர் தொகுதியில் மீண்டும் களம் இறங்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அந்த தொகுதியில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அதன்பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது தேர்தல் பிரசாரத்தைதொடங்கியுள்ளார். இதனை தொடர்ந்து மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் சொந்த ஊரான திருவாரூரில் நேற்று முன்தினம் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து பேசினார்.

பின்னர்பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு நேற்று இரவு திருச்சி வந்த அவர், கலெக்டர் அலுவலக சாலையில் உள்ள தனியார் ஓட்டலில் இரவு தங்கினார். இதனை தொடர்ந்து இன்று (புதன்கிழமை) காலை 9 மணிக்கு திருச்சி உழவர் சந்தையில் நடக்கும் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகிறார்.

இந்த கூட்டத்தில் திருச்சி மேற்கு, கிழக்கு. திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், ஸ்ரீரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் (தனி) ஆகிய 9 தொகுதிகளில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பேசுகிறார்.

இந்த நிலையில், திருச்சி கிழக்கு தொகுதியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை நடைபயிற்சி மேற்கொண்டார். அப்போது சாலையோர கடைகளிலும், நடந்து சென்ற பொதுமக்களிடமும் நலம் விசாரித்து வாக்கு சேகரித்தார்.

> திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கு காய்கறி வியாபாரிகள், பொதுமக்களிடம் திமுக சார்பில் போட்டியிடும் இனிகோ இருதயராஜுக்கு வாக்கு சேகரித்தார்.

பின்னர் திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கு காய்கறி வியாபாரிகள், பொதுமக்களிடம் திமுக சார்பில் போட்டியிடும் இனிகோ இருதயராஜுக்கு வாக்கு சேகரித்தார். வியாபாரிகள் கைகுலுக்கி வரவேற்பு தெரிவித்தனர்.

அப்போது ஏராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அதன் பின் சாலையோரம் இருந்த ஒரு தேநீர் கடையில் மு.க.ஸ்டாலின் அமர்ந்து எளிமையான முறையில் தேநீர் குடித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் இந்த எளிமையான பிரசாரம் பொதுமக்களை வெகுவாக கவர்ந்தது. இந்நிகழ்வின்போது முதல்-அமைச்சருடன் திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ், அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## எரிபொருள் விலை உயர்வால் விமானக் கட்டணம் உயர்கிறது?

**புதுடெல்லி, ஏப்.2:**

மேற்கு ஆசிய போர் சூழல் நெருக்கடியால் பல்வேறு நாடுகளில் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இந்தியாவில் வணிக சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நெருக்கடி சூழ்நிலையை சமாளிக்க மத்திய அரசு, மாநில அரசுகளுடன் ஆலோசனை நடத்தியது. இதன் தொடர்ச்சியாக எரிபொருள் தட்டுப்பாட்டை தவிர்க்கவும், கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், அமெரிக்கா - ஈரான் போர், ரூபாய் மதிப்பு வீழ்ச்சியால் விமான எரிபொருள் கடுமையான விலை ஏற்றம் கண்டுள்ளது. உள்நாட்டு விமானங்களுக்கான விமான எரிபொருள் விலை ஆயிரம் லிட்டருக்கு ரூ.96,638ல் இருந்து ரூ.2.07 லட்சமானது. சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலை ஆயிரம் லிட்டருக்கு ரூ.76,311 இல் இருந்து ரூ.1.58 லட்சமாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக விமானக் கட்டணங்களை நிறுவனங்கள் விரைவில் உயர்த்த வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## சென்னையில் 2,205 துப்பாக்கிகள் காவல் துறையிடம் ஒப்படைப்பு



**சென்னை, ஏப்.2:**

தேர்தலை முன்னிட்டு, உரிமம் பெற்று வைத்துள்ள 2,205 பேர், தங்களது துப்பாக்கிகளை போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பாதுகாப்பு கருதி தொழில் அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், திரை பிரபலங்கள் உள்பட பல்வேறு தரப்பினர் போலீஸாரின் அனுமதி பெற்று துப்பாக்கிகள் வைத்திருப்பார்கள்.


அதன்படி, சென்னையில் 2,735 பேர் வைத்துள்ளனர். இவர்களில் 500 பேர் விளையாட்டு மற்றும் பாதுகாப்பு சேவை உள்பட பல்வேறு காரணங்களுக்காக வைத்துள்ளனர்.

தேர்தல் நேரங்களில் உரிமம் பெற்று வைத்துள்ளவர்கள் அந்த துப்பாக்கிகளை காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால், விளையாட்டு மற்றும் சேவை துறையில் வைத்திருப்பவர்கள் துப்பாக்கிகளை ஒப்படைக்க தேவையில்லை.

இதற்கிடையே, 2,205 பேர் துப்பாக்கிகளை ஒப்படைத்த நிலையில் 30 பேர் தங்களிடமுள்ள துப்பாக்கிகளை உடனடியாக ஒப்படைக்க வேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு

### நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது




**சென்னை, ஏப்.2:**

தமிழகத்தில் உள்ள 60 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது. அதாவது 3 முதல் 5 சதவீதம் வரை சுங்கக்கட்டணம் உயர்கிறது.

தமிழகத்தில் 6,600 கி.மீ. தொலைவுக்கு தேசிய நெடுஞ்சாலைகள், அண்டைமாநிலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றின் வழியாக தினசரி ஆயிரக்கணக்கான சரக்கு வாகனங்கள், அரசு மற்றும் ஆம்னி பேருந்துகள், பயணிகள் வாகனங்கள் உள்ளிட்டவை இயங்கி வருகின்றன.

இச்சாலைகளைப் பயன்படுத்தும் வாகனங்களில் கட்டணத்தை வசூலிக்க, தமிழகத்தில் 77 இடங்களில் சுங்கச்சாவடிகள் செயல்படுகின்றன. இவற்றில் 60 சுங்கச்சாவடிகளில் ஏப்.1-ம் தேதி முதலும், மீதமுள்ள 17 சுங்கச்சாவடிகளில் செப்.1-ம் தேதி முதலும் கட்டணங்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன. அந்த வகையில், தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது.

சென்னையில் மாத்தூர், சூரப்பட்டு, வானகரம், செங்கல்பட்டில் பரனூர், கருங்குழி, காஞ்சிபுரத்தில் ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூரில் நல்லூர், எஸ்.வி.புரம், பட்டரைபெரும்புதூர் உட்பட 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்ந்தது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், கார்கள் மற்றும் ஜீப்களுக்கான சுங்கக்கட்டணம் ரூ.10 வரை உயரும். பேருந்துகள் மற்றும் பிற கனகர வாகனங்களுக்கான கட்டணம் அவற்றின் பிரிவுகளைப் பொருத்து ரூ.40 முதல் ரூ.200 வரை உயரவுள்ளது. சுங்கச்சாவடிக் கட்டணம் உயர்வால், அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. ஈரானில் நிலவும் போர் பதற்றத்தால், காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஓட்டல் உணவுகளின் விலை ஏற்கெனவே அதிகரித்துள்ளது. தற்போதைய சுங்கக் கட்டணம் உயர்வால் சரக்கு வாகனங்களுக்கான செலவும் அதிகரித்து, அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது.

நியாயமற்ற சுமை: இதுகுறித்து தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் உள்ள சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் உயர்த்தப்படவுள்ளது. எரிபொருள், சுங்கக் கட்டண உயர்வின் விளைவாக சரக்குப் போக்குவரத்துக்கான கட்டணங்கள் உயர்ந்து, அந்த விலை உயர்வு ஏழை, நடுத்தர மக்களின் தலையில் ஏற்றப்படுவதை மத்திய அரசு உணர வேண்டும்.

சாலைகளில் தரமற்ற பணிகள், பராமரிப்பு குறைபாடு உள்ளிட்ட பிரச்சினைகளை சரிசெய்ய மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்கள் செலுத்திய கட்டணத்துக்கே உரிய வசதி கிடைக்காமல் இருக்கும் நிலையில், கட்டணத்தை மேலும் உயர்த்துவது நேரடியாக மக்களை சுரண்டும் செயலாகும்.

ஆண்டுதோறும் சுங்கக் கட்டணத்தை உயர்த்திக்கொண்டிருப்பது மத்திய அரசின் மக்கள் விரோதப் போக்கையே காட்டுகிறது. சுங்கச்சாவடிக் கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 6 முதல் 9 வரையிலான வகுப்புகளுக்கு ஆண்டு இறுதித்தேர்வு தொடக்கம்

**சென்னை, ஏப்.2:**

தமிழக பள்ளிக்கல்வி பாடத் திட்டத்தில் 11 மற்றும் 12-ம் வகுப்பு தேர்வுகள் நிறைவு பெற்றுவிட்டன. தொடர்ந்து 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் 11-ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இத்தேர்வு வரும் 6-ம் தேதியுடன் முடிவடைகிறது. அதேபோல், 1 முதல் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கான முழு ஆண்டு தேர்வுகள் வரும் 10ம் தேதி முதல் 24-ம் தேதி வரை நடத்தப்படும் என பள்ளிக் கல்வித்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்வு முன்கூட்டியே நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி, பள்ளிக்கல்வித்துறை அட்டவணையை தயாரித்து சமீபத்தில் வெளியிட்டது. அதன்படி, 6 முதல் 9-ம் வகுப்பு வரையிலான மாணவ-மாணவிகளுக்கு ஆண்டு இறுதித் தேர்வு இன்று (புதன்கிழமை) முதல் தொடங்க இருக்கிறது.

அதனைத் தொடர்ந்து 4, 5-ம் வகுப்புகளுக்கு வருகிற 6-ந்தேதியில் இருந்தும், 1, 2 மற்றும் 3-ம் வகுப்புகளுக்கு வருகிற 8-ந்தேதியில் இருந்தும் ஆண்டு இறுதித் தேர்வு தொடங்கி நடைபெற உள்ளது. மொத்தமாக வருகிற 16-ந்தேதிக்குள் தேர்வை முடிக்க ஏதுவாக அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

அதாவது தேர்தல் 23-ந்தேதி நடைபெற உள்ள நிலையில் அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக ஆண்டு இறுதித்தேர்வு நடத்தி முடிக்கப்பட இருக்கிறது. தேர்வு முடிந்ததும் 17-ந்தேதியில் இருந்து மாணவ-மாணவிகளுக்கு விடுமுறை தொடங்கும் எனவும், ஆனால் ஆசிரியர்களுக்கு பள்ளி இறுதிநாள் வரை பணிக்கு வர அறிவுறுத்தப்படுவார்கள் எனவும் சொல்லப்படுகிறது.

இதுபற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பை பள்ளிக்கல்வித்துறை விரைவில் வெளியிடும். விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிகளை ஜூன் 4-ம் தேதி திறப்பதற்கு திட்டமிட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சென்னையில் வணிக காஸ் சிலிண்டர் விலை ரூ.200 உயர்வு



**சென்னை, ஏப்.2:**

மேற்கு ஆசியப் பகுதியில் நிலவி வரும் போர் பதற்றம் மற்றும் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே இந்த விலை உயர்வுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. இந்த விலை உயர்வு இன்று (ஏப்ரல் 1) முதல் அமலுக்கு வந்துள்ளது.

சென்னையில் வணிக சிலிண்டரின் விலை ரூ.2,140-லிருந்து உயர்ந்து ரூ.2,240 ஆக விற்பனை செய்யப்படுகிறது. தலைநகர் டெல்லியில் ரூ.2078 ஆகவும், கொல்கத்தாவில் ரூ. 2208 ஆகவும், மும்பையில் ரூ.2031 ஆகவும் விற்பனை ஆகிறது.

வணிக சிலிண்டர் விலை சுமார் ரூ.200 ரூபாய் வரை உயர்த்தப்பட்டிருப்பது ஹோட்டல் உரிமையாளர்கள், உணவகங்கள் மற்றும் சிறு தொழில் செய்பவர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த விலை உயர்வு காரணமாக உணவகங்களில் உணவுகளின் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கள்ளச் சந்தையில் வணிக சிலிண்டர் ரூ.6500 வரை விற்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. இதனால் பல உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்த்தப்பட்டுள்ளது.

வணிக சிலிண்டர் விலை கணிசமாக உயர்த்தப்பட்ட போதிலும், 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக காஸ் சிலிண்டர்களின் விலையில் தற்போதைக்கு எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

இது இல்லத்தரசிகளுக்குச் சற்று நிம்மதியைத் தந்தாலும், வணிக ரீதியிலான பாதிப்புகள் சந்தையில் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். மத்திய கிழக்கில் தற்போதைய மோதல் போக்கு நீடித்தால், வரும் காலங்களில் எரிபொருள் விலைகள் மேலும் உயர வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.



## கால்பிரவு செல்வமுருகன் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா பக்தர்கள் பால்குடம் எடுத்து வழிபாடு செய்தனர்



**மானாமதுரை, ஏப்.02:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கால்பிரவு கிராமத்தில் பிரசித்தி பெற்றஸ்ரீ செல்வ முருகன் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா கடந்த சில நாட்களுக்கு முன்பு காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது.

அதை தொடர்ந்து பங்குனி உத்திரத்தை முன்னிட்டு காலை விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி ஹோமம். சுப்ரமணியர் மூலமந்திரம் காயத்ரி ஜெப ஹோமம் நடைபெற்றது.வைகை ஆற்றில் இருந்து ஏராளமான பக்தர்கள் புனித தீர்த்தம் மற்றும் அலகுகுத்தி பால்குடம் எடுத்தும் ஊர்வலமாக வந்து செல்வமுருகனுக்கு பாலாபிஷேகம் செய்து வழிபாடு செய்தனர். தொடர்ந்து வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீசெல்வ முருகனுக்கு திருமண கோலசிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு விஷேச பூஜை தீபாராதனை நடைபெற்றது. பக்தர்களுக்கு சிறப்பு அன்ன தானமும் இரவு மயில் வாகனத்தில் வீதியுலா நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இதற்க்கான ஏற்பாடுகளை கோவில் ஸ்தாபகர் ஏஆர்பி முருகேசன் மற்றும் விழாக்குழுவினர் செய்து இருந்தனர்.

## தமிழகத்தில் 10-ந்தேதியில் இருந்து வெப்ப அலை வீசக்கூடும்- வானிலை மையம் எச்சரிக்கை

**சென்னை, ஏப்.02:**



சென்னை உள்பட தமிழகத்தில் ஒரு சில மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. கோடை வெயில் காலம் தொடங்கி விட்டதால் மார்ச் மாதமே வெப்ப நிலை அதிகரித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் வெப்பத்தின் தாக்கம் இன்னும் அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த மாதத்தில் தமிழ்நாட்டில் சாதாரண அளவை விட அதிகமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இது வெப்பத்தில் இருந்து ஓரளவு நிவாரணத்தை வழங்கக்கூடும் என்றாலும் வடக்கு மற்றும் கடலோர தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும் உள் தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும் சாதாரணத்தை விட அதிகமான வெப்ப அலை வீசக்கூடும். இதனால் வெப்ப அழுத்தம் ஏற்படலாம் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

இந்த மாதத்தில் தமிழகத்தில் வெப்ப அலை தாக்கம் ஏற்படக்கூடும். வருகிற 10-ந்தேதிக்கு மேல் மாநிலம் முழுவதும் அதிகபட்ச (பகல்) மற்றும் குறைந்தபட்ச (இரவு) வெப்ப நிலை நிலவும். நாளை (வெள்ளிக்கிழமை), சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வெப்பநிலை இயல்பை விட 2 டிகிரி செல்சியஸ் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதன் பின்னர் வெயில் சற்று குறைந்து காணப்படும்.

10-ந்தேதியில் இருந்து கடலோர வடக்கு தமிழ்நாடு, வடகடலோர மாவட்டங்களில் வெப்ப அலை அதிகமாக இருக்கும். அதாவது சென்னை, திருவள்ளூர் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கும்.

இந்த மாதம் வழக்கத்தை விட அதிக வெப்பமானதாக இருக்கும். மழை இடையிடையே நிவாரணம் அளித்தாலும் வெப்பத்தால் அசௌகரியங்கள் ஏற்படும். எனவே பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். நீண்ட நேரம் வெயிலில் இருப்பதை தவிர்க்க வேண்டும். வானிலையின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை தொடர்ந்து கவனிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விஜயை ஒருபோதும் விமர்சிக்க மாட்டேன்..!- சுந்தர்.சி

**மதுரை, ஏப்.02:**



மதுரை மத்தி அதிமுக கூட்டணி வேட்பாளர் சுந்தர். சி சென்னையில் செய்தியாளர் களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

மதுரை மத்தி தொகுதி மக்கள் எனக்கு வெற்றியைக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது.. இனி என் வாழ்வில் மாதம் 15 நாள் மதுரையில்தான் இருக்கும்.. அதை நான் உறுதிபடச் சொல்கிறேன்.திரைத்துறையில் 30 ஆண்டுகளாக சிறப்பாக பணிப்புரிந்து இருக்கிறேன். அரசியலை அடுத்தகட்ட நகர்வாக பார்க்கிறேன். தேர்தல் முடிவை வைத்துதான் அடுத்தது என்ன என்பது முடிவு செய்யப்படும்.

விஜய் மீது நானும், என் மீது விஜயும் பெரும் மதிப்பும், அன்பும் கொண்டவர்கள். என் மனைவியும் விஜயை தம்பியை போல்தான் கருதுகிறார்.

அதனால், விஜய் பற்றி விமர்சிக்கவோ அல்லது கட்சி, வேட்பாளர் பற்றி விமர்சிக்கவோ நான் தயாராக இல்லை.

ஆனால், மதுரை மத்திய தொகுதியை பொறுத்தவரையில், போட்டி இரட்டை இலைக்கும், உதயசூரியனுக்கும்தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ‘முடிவு எதுவாயினும் அதை ஏற்றுக்கொள்வதே அறம்’ சீட் ஒதுக்கப்படாதது குறித்து ஆளூர் ஷா நவாஸ் விளக்கம்

**சென்னை, ஏப்.02:**



விசிகவின் முக்கிய முகமாக இருக்கும், ஆளூர் ஷா நவாஸிற்கு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாதது தற்போது பெரும் பேசுபொருளாகியுள்ளது.

இந்நிலையில் இதுதொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது;

“2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில், விசிக சார்பில் போட்டியிட எமக்கு மீண்டும் வாய்ப்பு அமையவில்லை என்பதை வைத்து வலைதளங்களில் பல்வேறு கருத்துக்களில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறிகிறேன்.

இதில் என் மேல் அன்பு கொண்டு எனக்கு ஆதரவாக கருத்துப் பரிமாறிய அனைத்துத் தோழர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அதே நேரத்தில், ஒரு கட்சியில் யாருக்கு எப்போது எப்படி வாய்ப்பளிக்க வேண்டும் என்பது அந்தக் கட்சியின் தலைமை எடுக்கும் முடிவாகும். அம்முடிவு எதுவாயினும் அதை ஏற்றுக் கொள்வதே சிறந்த அறமாகும்.


அந்த வகையில், 2026 சட்டமன்றத் தேர்தலில் தலைவர் எழுச்சித் தமிழர் உள்ளிட்ட 8 வேட்பாளர்களும் வெற்றி பெற்று சட்டப்பேரவையில் விசிகவின் குரல் வலுவாக ஒலிப்பதற்கும், நமது கூட்டணி சார்பில் களம் காணும் அனைவரும் வெல்வதற்கும், திமுக தலைமையிலான நல்லாட்சி மீண்டும் அமைவதற்கும் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபடுவோம்.

எனது பொது வாழ்க்கையில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியதை விட, இன்னும் வீரியத்துடன் தொடர்ந்து அரசியல் களத்தில் பணியாற்றுவேன் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளூர் ஷா நவாஸ் தற்போது நாகை சிட்டிங் எம்.எல்.ஏவாக இருக்கிறார்.

## தீய சக்திக்கும், தூய சக்திக்கும் போட்டியல்ல: 2000-க்கும் 2500-க்கும் இடையே தான் போட்டியே..!- சீமான்

**கோவை, ஏப்.02:**



கோவை சூலூரில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நடந்தது.

இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பங்கேற்று வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

ஓட்டுக்கு காசு கொடுக்கும் ஜனநாயகம் கேடுகெட்ட நிலையை எட்டியுள்ளது. எதிர்கட்சியாக இருக்கும்போது வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு ஆளுங்கட்சியானதும் மக்களை மறந்துவிடுவது தான் திராவிட கட்சிகளின் வாடிக்கையாகும்.

ஸ்டாலின் ஆட்சி தவறு என்றால் அதற்கு நாம் தான் காரணம். நான் நமது தேர்தல் அறிக்கையில் தமிழகத்திற்கு 5 தலைநகரங்கள் வேண்டும் என்ற திட்டத்தை அறிவித்தேன். தற்போது அதே திட்டத்தை தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கையில் எடுத்துள்ளார். தனது அரசியல் எச்சிலில் தான் இன்று பல கட்சிகள் பிழைப்பு நடத்தி வருகின்றனர்.

அனைத்து கட்சிகளும் தமிழ் பெயர்களை பயன்படுத்தத் தொடங்கி இருப்பதே நாம் தமிழரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.

ஸ்டாலின் 2000 ரூபாய் தருகிறேன் என்றால், நடிகர் விஜய் 2500 ரூபாய் தருகிறேன் என்கிறார். இது தி.மு.க.வுக்கும் த.வெ.க-வுக்கும் இடையிலான போட்டி அல்ல. மாறாக 2000-க்கும் 2500-க்கும் இடையே நடக்கும் போட்டி. இதனை பார்க்கும்போது எனக்கு, ஆட்டுக்குடலோடு நடக்கும் போட்டியை நினைவுபடுத்துகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் கூடியிருந்த தொண்டர்கள் அவரை பாட்டுபாடும் படி கேட்டனர். உடனே அவரும் பாட்டு பாடத்தொடங்கினார்.

“1000 ரூபாயும் தந்தான், அரிசி, பருப்பும் தந்தான்.

இப்ப அண்டா, குண்டா தாரான், கூட 2000 ரூபாயும் தாரான் வாங்கிட்டு வாடி ஓட்டுப் போட்டுட்டு வரலாம். உன் 2000 ரூபாயும் வேணாம். விவசாயிக்கு ஓட்டுபோட்டா இது எல்லாம் வரும் தானா” என ஓட்டுக்கு பணம் வாங்குவதால் ஏற்படும் நிலை குறித்து தனது பாணியில் உணர்ச்சிகரமான தெம்மாங்கு பாடலைப் பாடி தொண்டர்களை சீமான் உற்சாகத்தில் ஆழ்த்தினார்.

## போதைப்பொருள் நடமாட்டம் குறித்து தகவல் தெரிவித்தால் ரூ.10,000 பரிசு - பா.ம.க. தேர்தல் அறிக்கை வெளியீடு

**சென்னை, ஏப்.02:**



சட்டசபை தேர்தலில் அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியில் 18 தொகுதிகளில் பாமக போட்டியிடுகிறது. இந்நிலையில் பாமக தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைவர் அன்புமணி வெளியிட்டார்.

பாமக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள சிறப்பம்சங்கள்:

* அடுத்த 5 ஆண்டுகளில் 1 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

* உடனடியாக தமிழ்நாடு முழுவதும் 40,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

* படித்த 1.30 கோடி இளைஞர்களில் 5 லட்சம் இளைஞர்களுக்கு முதல்கட்டமாக அரசு வேலை வழங்கப்படும்.

* மருத்துவம், மின்வாரியம் உட்பட அரசு, தனியார் துறை மூலமாக மொத்தம் 1 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

* பட்டப்படிப்பு முடித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 உதவித்தொகை வழங்கப்படும்.

* போதைப்பொருள் நடமாட்டம் குறித்து தகவல் தெரிவித்தால் ரூ.10,000 பரிசு.

* பொதுத்துறை, கூட்டுறவு வங்கிகளில் உழவர்கள் பெற்ற குறுகிய கால, மத்திய கால பயிர் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.

* மழலையர் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவச கல்வி வழங்கப்படும்.

*சென்னையில் பிரம்மாண்டமாக தமிழிசை அரங்கம் அமைக்கப்பட்டு தமிழிசை விழா நடத்தப்படும்.

* இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வாருக்கு மணி மண்டபம் அமைக்கப்படும்.

*அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் புத்தகப்பை இல்லாத கல்வி முறை அமல்படுத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பத்மநாபசாமி கோவிலில் ஆராட்டு விழா - திருவனந்தபுரத்தில் இன்று விமான சேவை ரத்து

**திருவனந்தபுரம், ஏப்.02:**



திருவனந்தபுரம் பத்மநாப சாமி கோவிலில் பங்குனி மாத திருவிழா கடந்த 24-ந் தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கியது.கோவிலில் வழக்கம் போல் பத்மநாபசாமிக்கும், கிருஷ்ண சாமிக்கும் 2 கொடிகள் ஏற்றப்பட்டது. கோவில் தந்திரி தரண நல்லூர் சதீசன் நம்பூதிரி கொடிகளை ஏற்றி வைத்தார். விழா நாட்களில் தினமும் காலை மற்றும் மாலையில் சாமி ஊர்வலம் நடைபெற்று வருகிறது.

விழாவில் நேற்று (புதன்கிழமை) இரவு 9 மணிக்கு பள்ளி வேட்டை நடைபெறுகிறது. நாளை (2-ந்தேதி) சங்கு முகம் கடற்கரையில் சாமிக்கு ஆராட்டு நடைபெறும். ஆராட்டு ஊர்வலத்தையொட்டி இன்று மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை விமான நிலைய ஓடு பாதை மூடப்படும். இந்த 5 மணிநேரம் விமான சேவை ரத்து செய்யப்படும்.

சாமி ஊர்வலம் விமான ஓடுபாதையை கடந்து செல்லும்போது, முறையாக, அனுமதி பாஸ் பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அதேபோல் புகைப்படம் எடுக்கவும், செல்போன், கேமரா, பிளாஸ்டிக் பொருட்கள், பைகள், குடை உட்பட பொருட்களை எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது என்று பத்மநாபசாமி கோவில் செயல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பங்குனி உத்திரம் திருச்செந்தூர் கோவிலில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்



**திருச்செந்தூர், ஏப்.02:**

இந்துக்கள் ஒவ்வொருவரும் பங்குனி மாதத்தில் வரும் உத்திரம் நட்சத்திரம் அன்று தங்கள் குலதெய்வ கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வது வழக்கம்.

அவ்வாறு குலதெய்வத்தை வழிபாடு செய்வதின் மூலம் தங்கள் குலம் செழிக்கும், திருமண தடை அகலும், குழந்தை பாக்கியம் கிடைக்கும். மேலும் நமது முன்னோர்கள் ஆசி கிடைக்கும் என்பது ஐதீகம். அவ்வாறு குலதெய்வம் தெரியாதவர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமியை வழிபட்டு செல்வார்கள். ஏராளமானோர் முருகப்பெருமானை வழிபாடு செய்து விட்டு அவரவர் குலதெய்வ கோவிலுக்கு செல்வார்கள்.

அந்த வகையில் இன்று பங்குனி உத்திரத்தை முன்னிட்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலில் குவிந்தனர். அவர்கள் காலையில் இருந்தே கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 4 மணி நேரத்துக்கு மேல் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 6 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகமும் நடந்தது. காலை 6.30 மணிக்கு கோவிலில் இருந்து வள்ளியம்மன் தபசுக்கு எழுந்தருளினார்.

## ‘ஜனநாயகன்’ டிக்கெட் பிரச்சினை: மேட்டூர் அருகே வேட்பாளரை நுழைய விடாமல் தடுத்த தவெகவினர்





**மேட்டூர், ஏப்.02:**

மேட்டூர் தொகுதி தவெக வேட்பாளர், ஒரு தலைப்பட்சமாக செயல்படுவதாக குற்றம் சாட்டி அவரை ஊருக்குள் நுழைய விடாமல் அக்கட்சியினரே தடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் மாவட்டம் மேட்டூர் சட்டப்பேரவை தொகுதியின் தமிழக வெற்றிக் கழக வேட்பாளராக செல்வம் போட்டியிடுகிறார். இவர் ஒவ்வொரு பகுதியாக சென்று நிராவாகிகளை சந்தித்துப் பேசி வுருகிறார். இந்நிலையில் வேட்பாளர் செல்வம் நேற்றிரவு நிர்வாகிகளை சந்திக்க கொளத்தூர் பகுதிக்கு வந்தார்.

அப்போது, கொளத்தூர் 4 ரோடு பகுதியில் இருந்த தவெக நிர்வாகிகள் 100-க்கும் மேற்பட்டோர் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அவரது காரை மறித்ததோடு, ஊருக்குள் நுழைய விடாமல் தடுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அப்போது,வேட்பாளருடன் வந்திருந்த நிர்வாகிகள் கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த நிர்வாகிகளுடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், அதனை ஏற்றுக் கொள்ளாமல் வாக்குவாதத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர்.


அப்போது, ‘ஜனநாயகன்’ படத்திற்கு முன்பதிவு செய்து வைத்திருந்த டிக்கெட்களை வாங்கி கொண்டு, கொளத்தூர் பகுதி நிர்வாகிகளுக்கு அதிக விலைக்கு விற்றதாகவும், நிர்வாகிகளிடம் வேட்பாளர் செல்வம் ஒரு தலைபட்சமாக செயல்படுவதாகவும் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில், தவெக வேட்பாளர் செல்வம் பதில் அளிக்காமல் காரில் அமர்ந்து கொண்டு இருந்ததால் நிர்வாகிகள் கடும் அதிருப்தியடைந்தனர்.

பின்னர், வேட்பாளர் செல்வம் மற்றும் அவரது நிர்வாகிகள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். தமிழக வெற்றி கழகம் தற்போது முதன் முறையாக சட்டப்பேரவை தேர்தலை சந்திக்கிறது. இதனிடையே, மேட்டூர் சட்டப்பேரவை தொகுதியில் வேட்பாளர் செல்வத்திற்கு கட்சியிலேயே கடும் எதிர்ப்பு எழுந்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

## விஜய் மீது நடவடிக்கை எடுக்க இந்திய கம்யூ. வலியுறுத்தல்

**சென்னை, ஏப்.02:**



தவெக தலைவர் விஜய், தனது கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பேசும் போது, “தேர்தல் நேரத்தில் ரூ.1000, 2 ஆயிரம், 5 ஆயிரம் கொடுத்தால் பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்கள் காதில் விசிலை ஊதி அனுப்புங்கள்.” என்று பேசியிருப்பது தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் அனைத்தையும் அப்பட்டமாக மீறிய செயலாகும்.

விதிமுறைகளை மீறியுள்ள விஜய் மீது, தேர்தல் ஆணையம் தானே முன் வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

## WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும்.7845904395/ 8668107106

ADVERTISE WITH US
CONTACT US 9438610756

WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம் முகக் குறிப்பு கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அனுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship: Clinical Training, Counseling Practice, Case Work
Jobs: Social Worker, Jr Psychologist, Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact 9790979539

PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

## WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact: 8428872887

## WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri ManjalMart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash, Teflon Coating, Ceramic Wax Treatment, Under Chassis Painting, Interior Foam Wash / Stain Remover, Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

## WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# கவிதை அரங்கம்!



பூவோடு
சேர்ந்திருக்கும்
வாசத்தைபோல்
உன் நினைவோடு
சேர்ந்திருக்கு
என் சுவாசம்

மறக்க முடியாத
பிம்பம் நீ
தவிர்க்க முடியாத
நினைவும் நீ

நீயின்றி என் வாழ்க்கை
முடியப்போவது இல்லை
நீயின்றி வாழ்வு வந்தால்
நான்
இருக்கப்போவதில்லை

என்னருகில்
நீயிருக்க
இருளேது
என் வாழ்வில்

## வாழ்க்கை தத்துவம்...



தலைகீழாக நின்றாவது
வரவேற்று விடு உன்
நிரந்தர சந்தோசத்தை

இவர்கள் ஏன் இப்படி
என்பதைவிட இவர்கள்
இப்படித்தான் என்று
நினைத்து விலகி
விடுவது நிம்மதி

துன்பங்கள் அனுபவித்த
காலத்தை மறந்து விடு
ஆனால் அது உனக்குக்
கற்பித்த பாடத்தை
மறந்து விடாதே

நான் என்கின்ற ஆணவம்
அவனா என்ற பொறாமை
எனக்கு என்கின்ற பேராசை
இவை மூன்றும் மனிதனை
நிம்மதியாக வாழ விடாது

# பு(பொ)ன்முறுவல்

காலைக் கதிரவன் வேலை செய்த களிப்போடு மஞ்சள் நீராட்டுக்குத் தயாரான மாலை நேரம்........

வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக சாலையில் வாகனங்கள் சீறிப் பாய்ந்தன. அத்தனை வாகனங்களையும் கண்களால் அளந்து லாவகமாக பின்னுக்குத் தள்ளி வீடு வந்து சேர்ந்தான் பிரபு.

சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு தொலைக்காட்சி முன் உட்கார்ந்தான்.

ஏங்க ! ஒரு விசயம் என்றபடியே கையில் காஃபியோடு வந்த மனைவியைப் பார்த்தான். இவள் கொடுக்கும் காஃபியே பரவாயில்லை என்னும் அளவிற்கு இவள் சொல்லக் கூடிய விஷயம் இருக்கும் என்பதை யூகித்தான்.

சொல்லு...... என்று சொல்லிக்கொண்டே வாய் காஃபியையும் கண்கள் தொலைக்காட்சியையும் பார்த்தன. கவனமில்லாமல் குடித்தால் தான் காஃபியின் சுவை தெரியாது.இது அவன் எப்பொழுதும் பின்பற்றும் ஒரு டெக்னிக்.

அது..... வர்ற வெள்ளிக்கிழமை அக்கா நம்ம வீட்டுக்கு வராங்களாம் என்றாள்.

அவள் அக்கா என்று சொன்னது அவளுடைய அக்காவை. தன் சொந்த அண்ணனின் மனைவியும் கூட. மனைவி ஒருவகையில் தூரத்துச் சொந்தம் என்பதால் இவன் சிறுவயதில் அந்த வீட்டில் வளர்ந்தது நினைவுக்கு வந்தது.

அந்த நாட்கள் மனக்கண் முன் வந்தது. அம்மா அப்பா இல்லாத காலங்களில் அண்ணனை நம்பி அவரது வீட்டில் இருந்த இளமைக் காலங்கள் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாது. அந்த வயதிற்கே உரிய பசிக்கான உணவு கிடைக்காது. அண்ணியும் அண்ணனும் தன் ஒரே மகனுடன் ஹோட்டலுக்கும் சினிமாவுக்கும் செல்லும்போது இவன் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது இன்றும் நினைவிருக்கிறது.

தன் கடமையைச் சரியாகச் செய்வதாக நினைத்துக் கொண்டு அண்ணன் சற்றும் பொருத்தமில்லாமல் மனைவியின் தங்கையைத் திருமணம் செய்து வைத்து தன் வாழ்க்கை பலியானது ஏனோ அந்த நேரத்தில் நினைவுக்கு வந்தது.

இத்தனை நாட்களில் ஏதோ ஒரு வகையில் அண்ணி தன் மனதைப் பாதித்ததும் தான் கஷ்டப்பட்டபோது எந்த உதவியும் செய்யாமல் தன் வாழ்க்கையை மட்டுமே கவனித்துக் கொண்டதும் நெருஞ்சிமுள்ளாகக் குத்திக் கொண்டே தான் இருக்கிறது.

அண்ணி ஒரு அலுவலகத்தில் நல்ல பதவியில் வேலை பார்த்தவர். வேலை பார்த்த காலத்தில் தன் குடும்பத்தைப் பற்றியோ தன் கஷ்டத்தில் பங்கு எடுத்ததோ அவனுக்கு நினைவு இல்லை. விருப்ப ஓய்வு வாங்கிய பிறகு அடிக்கடி அலைபேசியில் பேசுவது தொடர்ந்தது.

என்னங்க .....நான் பாட்டுக்கு பேசிட்டு இருக்கேன். எதுவுமே பேசாம இருக்கீங்க .அக்கா வராங்கன்னு சொன்னேனே என்று மனைவியின் குரல் கேட்டு நிகழ்காலத்திற்கு வந்தான்.

ம்....ம்..... வரட்டும் என்றவன் நல்ல ஹோட்டலுக்குக் கூட்டிட்டுப் போயிட்டு சினிமாவுக்கும் போயிட்டு வீட்டுக்கு வருவோம் என்றான்.

தன் பதிலைக் கேட்டு மனைவியின் முகம் மாறியதைக் கண்டவன் என்ன...... பாக்கற என்றான்.

எப்பவுமே நீங்க அவங்களைக் குறை தானே சொல்லுவீங்க .எனக்கு அக்கா உங்க அண்ணின்னு ரெண்டு வகையில சொந்தம் இருந்தாலும் அவங்க நமக்குன்னு இதுவரைக்கும் எதுவுமே செஞ்சதில்ல நம்ம கஷ்டப்பட்ட காலத்துல கூட இருந்தது இல்லை உதவி வேணுமான்னு கேட்டது கூட இல்லைன்னு அடிக்கடி சொல்லுவீங்களே அதான் ஆச்சரியமா இருந்தது என்றாள்.

ஆமா என்ன பண்றது..... நமக்குப் பிள்ளைங்க இருக்கு. மூத்தவளுக்குக் கல்யாணம் பண்ணனும். நமக்கும் வசதி வாய்ப்புன்னு அதிக அளவுல இருந்தாலும் அவங்க கிட்ட இருந்தும் நமக்கு உதவி தேவைப்படும். அது மட்டுமில்ல ஓய்வுப் பணமும் நிறைய வந்திருக்கும். பழசை எல்லாம் நெனச்சு அதை இழக்க விரும்பல அதனால நான் சொன்ன மாதிரி செய் என்று சொல்லிவிட்டு மீண்டும் தொலைக்காட்சியைப் பார்த்தான்.

தான், தன் வசதி, தன் சந்தோஷம் என்று மட்டுமே இவனால் எப்பொழுதும் எப்படி நினைக்க முடிகிறது. பழைய நினைவுகளை மீண்டும் மீண்டும் நினைத்து வாழ்க்கையைத் தொலைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் கூட சுயநலத்திற்காக எல்லாவற்றையும் மறந்து எப்படி தன்னிலையிலிருந்து இறங்கி இவனால் எண்ண முடிகிறது என்று நினைத்த போது அவள் இதழ்கள் இதயத்தின் மகிழ்வில்லாத ஒரு புன்னகையை வெளிப்படுத்தியது.

எதிரில் இருந்த நிலைக் கண்ணாடி அதைப் புன்னகையாகக் காட்டாமல் பு(பொ)ன்னகையாகக் காட்டியது. பொன் பொருளுக்காக வந்த சிரிப்பு.

ஆம்...... தன் கணவனின் இந்த எண்ணத்தால் இதழ் விரித்தது போலிப் புன்னகையை. பண ஆசை கொண்ட தன் கணவனின் செயலுக்காக மனம் வருத்தப்பட்டதை உணர்ந்தபடியே அடுக்களைக்குள் சென்றாள்.



தமிழ்நிலா

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*நோயாளி:* டாக்டர், எனக்கு ஒரு சந்தேகம். தூக்கத்துல கனவு வரும்போது ஏன் நம்மால ஓட முடியல?

*டாக்டர்:* அது ஏன்னா... நீங்க தூங்கும்போது உங்க கால்கள் லீவுல இருக்கும், அதான்!

*நண்பன் 1:* மச்சி, அந்த மரத்துல ஏறி குதிச்சா என்ன ஆகும்?

*நண்பன் 2:* என்ன ஆகும்? 'தலை' கீழா விழுவ, அவ்வளவுதான்!



# தினம் ஒரு சமையல்



## பாசிப்பருப்பு வேர்கடலை கொழுக்கட்டை

### தேவையான பொருட்கள்:

*1 கப் அரிசி மாவு*
*2 கப் தண்ணீர்*
*1 ஸ்பூன் நெய்*
*1 சிட்டிகை உப்பு*
*பூரணம் செய்ய:*
*1 கப் பாசிப்பருப்பு*
*1/2 கப் வேர்கடலை*
*1பெரிய மூடி தேங்காய் துருவல்*
*2 கப் வெல்லம்*
*1 ஸ்பூன் ஏலத்தூள்*
*3 ஸ்பூன் நெய்*

### செய்முறை:

தண்ணீர் உடன் உப்பு நெய் சேர்த்து கொதிக்க விடவும் கொதித்ததும் சிறிது சிறிதாக மாவுடன் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்தில் பிசைந்து கொள்ளவும் ஈரத்துணி கொண்டு சுற்றி வைக்கவும்




பூரணம் செய்ய வேர்கடலையை வறுத்து தோல் நீக்கி புடைத்து மிக்ஸியில் போட்டு கரகரப்பாக பொடித்து கொள்ளவும் பின் பாசிப்பருப்பை மலர வேகவிடவும் வெல்லத்துடன் தண்ணீர் சேர்த்து கொதிக்க விட்டு வெல்லம் கரைந்ததும் இறக்கி வடிகட்டி பின் மீண்டும் கொதிக்க விட்டு கம்பி பாகு பதம் வந்ததும் வேகவைத்த பாசிப்பருப்பை சேர்த்து நன்கு கிளறவும் பின் பொடித்த வேர்க்கடலை சேர்த்து தேங்காய் துருவல் சேர்த்து ஏலத்தூள் சேர்த்து நெய் விட்டு கெட்டியாக கிளறி இறக்கவும்

பின் கைகளில் சிறிது நெய் தடவி மாவை சின்னச் சின்ன உருண்டைகளாக உருட்டி இரண்டு கட்டை விரலால் குழி செய்யவும் கிண்ணம் போல் வரும் பின் பூரணத்தை வைத்து மூடவும்

பின் ஆவியில் 12 நிமிடங்கள் வரை வேகவிடவும் சுவையான ஆரோக்கியமான மணமான பாசிப்பருப்பு வேர்கடலை கொழுக்கட்டை ரெடி

## வெள்ளைமருது பயன்கள்



மருத மரம், குறிப்பாக வெள்ளை மருது (TERMINALIA ARJUNA), அதன் அபாரமான மருத்துவ குணங்களுக்காகப் பண்டைய காலம் தொட்டே அறியப்படுகிறது. இதனை ஆற்று மருது, நீர் மருது என்றும் அழைப்பார்கள். இதன் இலைகள், பழங்கள் மற்றும் விதைகள் பயனுள்ளதாக இருந்தாலும், இதன் பட்டை மிகச்சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

வெள்ளை மருதின் முக்கிய பயன்கள் இதோ:

1. இதய ஆரோக்கியம் (HEART HEALTH)

மருத மரம் இதயத்திற்கு ஒரு சிறந்த நண்பன் என்று கருதப்படுகிறது.

மாரடைப்பு தடுப்பு: இதயத் தசைகளை வலுப்படுத்தி, ரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது.

கொலஸ்ட்ரால் கட்டுப்பாடு: ரத்த நாளங்களில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைத்து, அடைப்புகள் ஏற்படாமல் தடுக்க உதவுகிறது.

ரத்த அழுத்தம்: உயர் ரத்த அழுத்தத்தைக் (HIGH BP) கட்டுக்குள் வைக்க இதன் பட்டை கஷாயம் பெரிதும் உதவுகிறது.

2. எலும்பு ஆரோக்கியம்

எலும்பு முறிவு: இதில் கால்சியம் சத்து அதிக அளவில் உள்ளதால், எலும்பு முறிவுகள் விரைவாகக் குணமடைய உதவுகிறது.

எலும்பு வலிமை: இது எலும்பு செல்களின் வளர்ச்சியைத் தூண்டி, எலும்புகளை வலுவாக்குகிறது.

3. சர்க்கரை நோய் மேலாண்மை

வெள்ளை மருது உடலில் உள்ள சர்க்கரையின் அளவைக் குறைக்க உதவுகிறது. இது கணையத்தில் உள்ள செல்கள் சேதமடையாமல் பாதுகாப்பதாகக் கருதப்படுகிறது.



# 3 நாட்களில் ஹாப்பி ராஜ் திரைப்படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா..



அறிமுக இயக்குநர் மரியா ராஜா இளஞ்செழியன் இயக்கத்தில் ஜி.வி. பிரகாஷ் நடிப்பில் உருவாகி வெளிவந்துள்ள படம் ஹாப்பி ராஜ்.

இப்படத்தில் கௌரி பிரியா, ஜார்ஜ் மரியன், கீதா கைலாசம், மதுரை முத்து என பலரும் நடித்துள்ளனர். மேலும் பல வருடங்களாக சினிமாவில் தலைகாட்டாமல் இருந்து வந்த நடிகர் அப்பாஸ், இப்படத்தின் மூலம் ரீ என்ட்ரி கொடுத்துள்ளார்.

கடந்த வாரம் வெளிவந்த ஹாப்பி ராஜ் திரைப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும், கலவையான விமர்சனங்களும் இப்படத்தின் மீது வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், 3 நாட்களில் ஹாப்பி ராஜ் திரைப்படம் உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் 3 நாட்களில் ரூ. 3.5 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது.



சினிமா

இன்ஸ்டாகிராமில் நடிகை அன்ஷிதா வெளியிடும் புகைப்படங்கள் உடனடியாக ரசிகர்கள் மத்தியில் வைரலாகும். அப்படி, வைரலான அன்ஷிதாவின் அழகிய புகைப்படங்கள் இதோ பாருங்க..

# பிரதீப் ரங்கநாதனின் LIK படத்திற்கு நடந்த படு சூடான வியாபாரம்... ரிலீஸ் தேதியுடன் வந்த அறிவிப்பு



ஜெயம் ரவி நடித்த கோமாளி படத்தின் மூலம் ஒரு இயக்குனராக தமிழ் சினிமாவில் என்ட்ரி கொடுத்தவர் தான் பிரதீப் ரங்கநாதன்.

அப்படத்தின் வெற்றியை தொடர்ந்து லவ் டுடே என்ற படத்தை இயக்கியவர் அப்படத்தின் மூலமும் மாபெரும் வெற்றியை கண்டார்.

பின் டிராகன், டியூட் படங்கள் நடித்தார், அப்படங்களும் பிரதீப் திரைப்பயணத்தில் மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது. அடுத்து பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள லவ் இன்சூரன்ஸ் கம்பெனி படத்திற்காக ரசிகர்கள் அனைவரும் ஆவலாக வெயிட்டிங்.

மேலும் எஸ்.ஜே.சூர்யா, கீர்த்தி ஷெட்டி, சீமான், யோகி பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர், அனிருத் தான் இசையமைத்துள்ளார். பேன்டஸி காதல் கதைக்களத்தில் உருவான இப்படத்தின் டீஸர் கூட வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இப்படத்தின் சாட்டிலைட் உரிமையை விஜய் தொலைக்காட்சி வாங்க டிஜிட்டல் உரிமையை அமேசான் பிரைம் பெரிய தொகை கொடுத்து வாங்கியுள்ளார்களாம். அதோடு படம் வரும் ஏப்ரல் 10ம் தேதி ரிலீஸ் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீராம நவமி



"ராம நாம கீர்த்தனை நாத இன்ப வெள்ளமே
ஆத்மநாம பிரார்த்தனை தெள்ள தெளிந்த உள்ளமே"
தெளிந்த மனம், தூய உள்ளம் அடைய ஒரே வழி ராம நாம கீர்த்தனை.சித்த சுத்தி அடைய ராம நாமம் வழி நல்கும் என எத்தனை மகான்கள் முத்திரை பதிந்துள்ளனர்.

சாதாரணமாக நாம் உழைத்து வங்கிக் கணக்கில் வைக்கும் பணத்தை செலவழித்தால்தான் பொருள் கிடைக்கும்.
ஆனால் ராம நாம வங்கியில் நாம் எழுதி சேர்க்கும் வைப்புநிதி அள்ள அள்ள குறையாமல் குவியும்.
"தாய் நினைந்த கன்றேயொக்க என்னையும் தன்னையே நினைக்கச் செய்து தான் எனக்காய் நினைந்து அருள் செய்யும் அப்பணி."
அதாவது ராம நாமம் சொல்லுபவனிடம், கன்றை நினைந்து ஓடி வரும் தாய்ப்பசு போல, ராம பகவான் ஓடி வந்து, " நீ சொல்லும் நாமத்திற்கு உரியவன் நான்தான்" என்றும் நாம் ஒன்றும் கேட்காமல் இருந்தாலும் நமக்கு என்ன அருள் செய்யலாம் என நினைந்து அருள் செய்வதும் அவன் பணி என்று பொருள் தருகிறது.
ராம நாம பாராயணத்திற்கு தன் தவமெல்லாம் ஈடாக வைத்து ஸ்ரீ போதேந்திரர் பதித்த முத்திரை -
"ஸதா ஸர்வேஷ்டதம் ஜந்தோ:
ஸர்வாரிஷ்ட நிவாரணம்
ஸ்ரீராம நாம ஜயதி
ச்ரேயோ ஹேது சிகாமணீ:"
'அரிஷ்ட நிவாரணம்' - நோயற்ற வாழ்வு, இதைக் காட்டிலும் என்ன சொத்து வேண்டும் மானிடராகிய நமக்கு.... ராம ரசத்தைக் குடியுங்கள்,.என பொருள் பட "பிபரே ராம ரசம் " ஸ்ரீ ஸதாசிவ பிரஹ்மேந்திரர் பாடியுள்ளார்.
எத்துணை முயன்றும் சில பழக்கங்களை விட முடிவதில்லை என்று தவிக்கிறோம்.
ராம நாமம் சொல்லப் பழகுங்கள்.
நாமம் சொல்லும் பழக்கத்திலிருந்து விடுபட முடியவில்லை என்றால் நாம் எவ்வளவு பாக்கியம் செய்தவர்கள்.

"ஒரு சொல் ஒரு வில் " என தனது ஸ்ரீராம அவதாரத்தில் ,மனித வாழ்வின் எளிமையை நிரூபித்தார் ஸ்ரீமந் நாராயணன்.
சத்ய யுகத்தில் தியானத்தின் மூலமும்,த்ரேதா யுகத்தில் யாக யக்ஞங்கள் மூலமும்,த்வாபர யுகத்தில் ஆராதனை மூலமும் கிடைத்த நலன்கள் எல்லாம் கலியுகத்தில் பகவான் நாமாவை,ராம நாமத்தை,ஜபிப்பதன் மூலமே கிடைத்துவிடும்.

"அன்பு என்ற மொழியிலே
தர்மம் சென்ற வழியிலே
அன்னை தந்தை சொல்லிலே
ஸ்ரீ ராமர் கண்ட வெற்றியே"
அன்பு வழியிலே தர்மம் தழைக்க,தந்தை சொல் சிறக்க சூரிய வம்சத்தில் ஸ்ரீராமன் நவமி திதியில் பகல் வேளையில் அரண்மனையில் அவதரித்தார் .
எண்களில் ஒன்பதை எப்படி பெருக்கினாலும் அது தன் நிலைமை மாறாது. ராமபிரான் அதுபோல தன் நிலை மாறாமல் மனிதனாக அவதரித்து மனிதனாக வாழ்ந்து காட்டி தெய்வமானார்.

"அன்னை தந்தை மனதிலே
ஆசை பாசம் வளர்ப்பிலே
அண்ணன் தம்பி உறவிலே
அனைத்து பலமும் அடங்குமே"
ராமாயணம் ஆதிகாவியம் என பெயர் பெற்றது.
ரகு குல மன்னன் தசரதன்,அவரது மூன்று மனைவியருக்கும் மகன்கள் நால்வராய்- ராமன் லட்சுமணன் பரதன் சத்ருக்னன் - எனப் பிறந்து , பாசத்துடன் வளர்க்கப் பட்டு , அண்ணன் தம்பி உறவின் மேன்மையை வலியுறுத்தி ,வால்மீகி முனிவரால் ஏழு காண்டங்களாக வரையப்பட்ட ஒரு அற்புத காவியம் ராமாயணம்.
"ராம கதை மகத்துவம்
உலக வாழ்க்கை தத்துவம்
நீதி நியாயம் நேர்மையும்
ஸ்ரீ ராமர் வாழ்ந்த வாழ்க்கையே"
ராம நாமம் மனதை தூய்மையாக்குகிறது.
ராம நாம ஸாம்ராஜ்யத்தில் நமது மனதை செலுத்தி , எல்லோருக்கும் எல்லா மங்களங்களையும் அருள அந்த ரகுகுல திலகனை வணங்குவோம்.

நன்மையும் செல்வமும் நாளும்
நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து
தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித்
தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ
ழுத்தினால்

கேட்கவே இனிமையாக இருக்கிறதல்லவா?
அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியில் கம்பன் அளித்த காவிய அமுதம் கம்ப ராமாயணம் ஒரு வாடாத மலராகும்.
ராமாயணம் கதையைக் , கேட்டறிந்த அறிவு நம் எல்லோருக்கும் உண்டு.
கம்ப ராமாயணம் புத்தகம் , கடைசி பக்கங்களில் 'யுத்த காண்டத்தில்', 'திருமுடி சூட்டு படலத்தில்' அந்த வரிகளை...
"அரியணை அநுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிப்ப
இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலி ஓங்க
வெண்ணெயூர்ச் சடையன் தண்டல்
மரபுளோர் கொடுப்ப வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி"
ஸ்ரீ ராம பட்டாபிஷேகப் படத்தில் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று தோன்றும்.
வனவாசம் முடிந்து குறித்த நாளில் ஸ்ரீ ராமர் வராததை, நந்திக்கிராமத்தில் காத்திருந்த பரதன் உணர்ந்து, சத்ருக்னனை அரசுரிமை ஏற்கக் கோரி , தீயில் தன்னை மாய்த்துக் கொள்ள முயன்றார்.
அன்னையரும் , சத்ருக்னனும், மற்றவரும் தடுத்தும் கேளாமல்,பரதன் ராமனை தியானித்தவாறு நெருப்பில் விழப் போக , அஞ்சனை மைந்தன் ஆகாய மார்க்கமாக
ராமத் தியானத்துடன் பரதன் முன் வந்து நின்று முத்திரை மோதிரத்தை அளித்து , ஐயனின் வரவை அறிவித்தார்.
மகிழ்வுற்ற அனைவரும் பரத்வாஜ முனிவரைக் வணங்கி, வந்து நின்ற ஸ்ரீராமன் முதல் அனைவரையும் ஆரவாரித்து தழுவி வரவேற்றனர்.
பின்னர் பிரம்மதேவர் ஆணைப்படி மயனை அழைத்து மகுடாபிஷேக மண்டபம் அமைத்து ,ரத்தினம் பதித்த குடங்களில் சரயு நதி நீரைக் கொணர்ந்து , மங்கல கீதம் முழங்க , வேத மந்திரங்கள் முழங்க , சீதாதேவியோடு இணைந்த ஸ்ரீ ராமருக்கு தீர்த்த அபிஷேகம் செய்து , அலங்கரித்து அரியணையில் அமர்த்தினர் . பலவகை வாத்தியங்கள் முழங்க , தேவர்கள் பூமாரிப் பொழிய ராமபிரான் திருமுடியில் மாணிக்க மகுடத்தை சூட்டினார் வசிஷ்டர்.

கெட்டி மேளம் முழங்க ,மணமகன் மணமகள் கைப்பிடித்து மூன்று முறை அக்னியை வலம் வந்து , கூடியுள்ளோர் வாழ்த்துரைக்க, மாங்கல்யதாரணம் நடந்தவுடன் , சங்காராபரண ராகத்தில் "சீதா கல்யாண வைபோகமே" என்ற பாடல் தேன்மதுரமாக காதில் விழும்..
மகாலட்சுமியின் அவதாரமாக ,பூதேவியாக,
சீதா தேவி ஜனக மகாராஜாவிற்கு மகளாக மிதிலையிலும், தர்மத்தை நிலைநாட்ட,தசரத மகாராஜாவின் மகனாக ஸ்ரீராமன் அயோத்தியிலும் அவதரித்தனர்.
ஸ்ரீராமனுக்கும், சீதைக்கும் மனித வாழ்க்கை முறைப்படி, மனிதர்களுக்கு வாழ வேண்டிய வழி முறைகளை தெரிவிப்பதற்காகவே அவதாரம் எடுத்துக் கல்யாணத்தை முறைப்படி நடத்திக் காட்டினார் மனிதனாக அவதரித்த ஸ்ரீராமன்.

அக்னிசாக்ஷியாக,சப்தபதி,அருந்ததி தரிசனம் செய்து ,பாணிக்ரஹணம் பண்ணி விவாஹம் நடைபெற்றது..
"விசேஷண வாஹயதி இதி விவாஹ"
---
கல்யாணம் என்பது இருவரையும் பொறுப்புள்ளவர்களாக செய்விக்கிறது.ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கை,அமைதியுள்ள வாழ்க்கையாக அமைய அடித்தளம் இடுகிறது..
ஸ்ரீராமருடன் திருமணம் ஆனது முதல், அரண்மனையில் வாழ்க்கை நடந்தாலும், காட்டில் வாழ்க்கை நடந்தாலும்இ ரண்டையும் சமமாகப் பாவித்து கணவனைப் பிரியாமல் ஒரு மனதாக வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதை எடுத்துக் காட்டினாள் சீதா தேவி.
இதை வைத்துத்தான், "சீதா கல்யாண வைபோகமே" என்று பாடினார்கள்.
கம்பன் இதை காவியத்தில் வடித்த அழகு வார்த்தைகளால் வரைய இயலாது. வானவர்களுக்கெல்லாம் தலைவனாகிய ஸ்ரீராமன் சீதையைத் தன் மனத்தில் நினைத்திருக்க, 'தேன் உண்ணும் வண்டுகள் மொய்க்கும் கூந்தலைக் கொண்ட சீதைக்கு, நாளை திருமணம்' என்று அறிவித்தான்,ஜனக மகா ராஜன்..

மிதிலையில் நிலவிய செல்வச் செழிப்பை, எங்கும் பார்த்திருக்கவே முடியாது. அவ்வண்ணமே சீதையும் ராமனும் மாலை சூடும் இந்த மண நாள்தான்,அனைவருக்கும் கண் குளிர்ந்த காட்சியைக் காணக் கிடைத்த மிகச் சிறப்பான நாள் என கம்பன் வர்ணிக்கிறார்.

சீதையும் ராமனும் திருமணம் செய்துகொள்ளவிருக்கும் அந்த மண்டபம், முந்நாளில் மயன் என்ற சிறந்த தச்சனால் செய்யப்பட்டது.
தங்களின் பிரியமான ஸ்ரீராமனின் திருமணம் காண ஆண்களும்,பெண்களும்,சூழ பல தேசத்து அரசர்களுடன் தசரதனும், ஜனகனும் அங்கே கம்பீரமாக அமர்ந்துள்ளனர்.
மாப்பிள்ளை ராமன் தேரில் வந்து மண்டபத்தினுள் நுழைகிறான்!
வில்லைப் பயன்படுத்துவதில் சிறந்தவன் அந்த ஸ்ரீராமனை ,திருமண அலங்காரங்களுடன் பார்க்கும்போது, மேரு மலையில் சூரியன் உதித்ததுபோல் இருந்ததாம்...
சூரியவம்சத்தில் பிறந்தவனாயிற்றே!
ஒரு சொல்,ஒரு இல் ,ஒரு வில் என வாழ்ந்து காட்டியவன்....
சீதையும் மலையில் உதிக்கிற வெண்மதி போல் புன்சிரிப்புடன் தேவதை போல் வருகிறாள்!
சீதையும், ராமனும் திருமணம் செய்துகொள்கிற அழகைக் காண இந்திரன் தன்னுடைய மனைவியாகிய இந்திராணியுடனும்,சிவபெருமான் உமையுடனும்,பிரம்மன் சரஸ்வதி தேவியுடனும் வந்தனர்...

சக்கரவர்த்தித் திருமகனாகிய ராமனுக்கு எதிரே வந்து நின்ற ஜனகன், அவனுடைய தாமரை போன்ற கையில் குளிர்ந்த நல்ல நீரை வார்த்து சீதையைத் திருமணம் செய்துகொடுத்தான்.
'பரம்பொருளாகிய திருமாலும், தாமரையில் வாழும் திருமகளையும்போல, என் சிறந்த மகளாகிய சீதையுடன் நீ என்றென்றும் வாழ்க!'
என வாழ்த்தினான...உண்மை அதுவன்றோ?
வீரனாகிய ராமன், திருமணத்துக்குரிய மந்திரங்கள் முழுவதையும் சொல்லி,ஹோமங்களை முறைப்படி செய்து சீதையைக் கைப்பிடித்தான்!

ஆர்த்தன பேரிகள், ஆர்த்தன சங்கம்,ஆர்த்தன நான்மறை, ஆர்த்தனர் வானோர்,ஆர்த்தன பல்கலை, ஆர்த்தன பல்லாண்டு,ஆர்த்தன வண்டினம், ஆர்த்தன வேலை!
என அந்தக் காட்சியை வர்ணிக்கிறான் கம்பன்...

"ராம" நாமம் பஜித்து, இல்லந்தோறும் தீப ஒளி மிளிரச் செய்து அந்த ரகுகுல திலகன், கோசலை மைந்தன் , பரம தயாளன்,ராஜீவ லோசனன்,ஆத்மா ராமனை, ஆனந்த ரமணனைப் பாடி துதித்து மகிழ்வோம்.



சோபனா விச்வநாதன்

# தினம் ஒரு தலைவர்கள்

# சந்திர ராஜேஸ்வர ராவ் வரலாறு

சந்திர ராஜேஸ்வர ராவ் (ஜூன் 6, 1914 - ஏப்ரல் 9, 1994) ஒரு இந்திய கம்யூனிஸ்ட் அரசியல்வாதி ஆவார். அவர் தெலுங்கானா கிளர்ச்சியின் (19461951) தலைவர்களில் ஒருவராக இருந்தார் . 1992 ஆம் ஆண்டு உடல்நலக் காரணங்களுக்காகப் பதவி விலகுவதற்கு முன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஐ) பொதுச் செயலாளராகவும் 28 ஆண்டுகள் பணியாற்றினார்.

வாழ்க்கை
ராவ் ஒரு வசதியான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஜூன் 6, 1914 அன்று இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள மங்களபுரம் கிராமத்தில் பிறந்தார். வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்திலும் விசாகப்பட்டினத்தில் உள்ள ஒரு மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவக் கல்வியைப் பெற்றார் . 1931 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் (சிபிஐ) சேர்ந்தார். ராவ் 1954 மற்றும் 1955 இல் அகில இந்திய கிசான் சபாவின் (விவசாயிகள் சங்கம்) துணைத் தலைவராக இருந்தார். டிசம்பர் 1964 இல் அவர் சிபிஐ தேசிய கவுன்சிலின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 1974 இல் ஆர்டர் ஆஃப் லெனின் வழங்கப்பட்டது .

அவரது மகன் சந்திர சந்திரசேகர் மற்றும் பேரன் சந்திர ஜெய்தீப் ஆகியோர் ஆந்திரப் பிரதேசத்தில் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.

தெலுங்கானா கிளர்ச்சியில் பங்கேற்பு
1946 ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் நிலைமை மேலும் மேலும் பதட்டமாக மாறியது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஆந்திர மகாசபாவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (சிபிஐ) ஆயுதமேந்திய எதிர்ப்பைத் தேர்ந்தெடுத்தன, அதுதான் மக்களுக்குத் திறந்திருக்கும் ஒரே நடவடிக்கை என்று நம்பின. பி.சி. ஜோஷியின் தலைமையில் , சிபிஐ நிஜாமின் ஆட்சியை அகற்றும் குறிக்கோளுடன் ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடங்கியது. இந்த மோதல் 1946 முதல் 1948 வரை நீடித்தது.

இந்தக் காலகட்டத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது, ஹைதராபாத்தில் ஒரு கம்யூனிஸ்ட் இந்தியக் கொடியை ஏற்றினார். இருப்பினும், நிஜாம் இந்தியாவுடன் இணைய மறுத்துவிட்டார், இதனால் மாநில ஒருங்கிணைப்புக்கான பேச்சுவார்த்தைகள் தேவைப்பட்டன. இதற்கிடையில், பிப்ரவரி 1948 இல் கல்கத்தாவில் நடந்த சிபிஐயின் இரண்டாவது மாநாட்டில் இடதுசாரி பிரிவினைவாத மற்றும் சாகசவாதத் தலைமையின் எழுச்சி காணப்பட்டது, இது பி.சி. ஜோஷியை நீக்கி, பி.டி. ரணதிவே பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டதற்கு வழிவகுத்தது. தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தில் முக்கிய நபரான ரணதிவேவின் கொள்கைகள் கட்சிக்குள் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஆனால் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தனர். பொதுவான கருத்து இருந்தபோதிலும், அவர் 1948 இல்



மத்திய குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், பொலிட்பீரோவிற்கு அல்ல.

கட்சிக்குள், பெரும்பாலும் 'ரஷ்ய வழி' மற்றும் 'சீன வழி' என்று அழைக்கப்படும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தபோதிலும், இரு பிரிவுகளும் ஆயுதப் போராட்டம் குறித்து ஒன்றிணைந்தன. செப்டம்பர் 13, 1948 வாக்கில், இந்தியப் படைகள் நிஜாமை வீழ்த்தி ஹைதராபாத்தை இந்தியாவுடன் இணைத்தன, விவசாயிகளுக்கு சலுகைகளையும் வழங்கின. ஆயுதப் போராட்டத்தின் முதன்மை நோக்கங்கள் இவைதான், அவை தர்க்கரீதியாக முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இருப்பினும், மத்தியத் தலைமை போராட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்தக் கொள்கையின் பேரழிவு விளைவுகள் 1950 ஆம் ஆண்டு வாக்கில் தெளிவாகத் தெரிந்தன, இதன் விளைவாக ஜூன் 1950 இல் கல்கத்தாவில் நடந்த மத்தியக் குழுக் கூட்டத்தில் ரணதிவேக்குப் பதிலாக சி.ராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். புதிய 'ஆந்திரக் கோட்டின்' சிற்பியான ராவ், நெருக்கடியைத் தீர்க்கத் தவறிவிட்டார், இது இந்த அணுகுமுறையும் குறைபாடுடையது என்பதை உணர வழிவகுத்தது. இதன் விளைவாக, சி. ராஜேஸ்வர ராவ், எஸ்.ஏ. டாங்கே, கே. கோவிந்த ராவ், சி.ஆர். வல்லபன் ஐயர் (மணி ஐயர்), பசவ்புன்னையா மற்றும் அஜோய் கோஷ் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட சிபிஐ குழு, மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்கள் குறித்து ஸ்டாலினுடன் கலந்தாலோசிக்க சோவியத் யூனியனுக்குச் சென்றது. இது ஏப்ரல் 1951 இல் வரைவு கட்சித் திட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகளை வெளியிடுவதற்கும், 1951 இல் கல்கத்தாவில் நடந்த ஒரு சிறப்பு மறைமுகக் கட்சி மாநாட்டில் அஜோய் கோஷ் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வழிவகுத்தது.

# கேரள சட்டமன்றத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்களுக்கு 'அல்வா' தேர்தல் ஆணையம் அறிவிப்பு

திருவனந்தபுரம், ஏப்.2:

கேரளாவில் ஏப்ரல் 9ந் தேதி நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு, தேர்தல் ஆணையத்தின் சார்பில் 'அல்வா' வழங்கப்பட உள்ளது.

கேரள மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல்களில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், 'வாக்கு இனிமையாக்கும் கேரளப் பிரச்சாரம்' என்ற சிறப்பு இயக்கத்தை கேரளா மாநிலத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி (சிஇஓ) ரத்தன் யு கேல்கர் அறிவித்துள்ளார்.

இந்த உத்தரவின்படி, இளைஞர்களின் வாக்களிப்பு விகிதத்தை அதிகரிக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, மாவட்டங்கள் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் முதல் முறை வாக்களிப்பவர்களுக்கு பிரத்யேக பிராண்ட் அல்வா விநியோகிக்கப்படும். இந்த முன்னெடுப்பிற்காக வாக்குச்சாவடிகளை அடையாளம் காணும் மாவட்ட தேர்தல் அலுவலர்களின் அலுவலகங்களுக்கு 200 அல்வா பாக்கெட்டுகள் விநியோகிக்கப்படும் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள், முதல் முறை வாக்களிப்பவர்களைச் சரிபார்ப்பதற்கும், நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் அல்வா பொட்டலங்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் பொறுப்பாவார்கள். விநியோகச் செயல்முறையானது தேர்தல் நடைமுறைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்றும், தேவைப்பட்டால் வட்டார விடுதலை அதிகாரிகளுக்கு உதவுவதற்காகக் கூடுதல் தன்னார்வலர்கள் பணியமர்த்தப்படலாம் என்றும் அந்த உத்தரவு மேலும் வலியுறுத்தியுள்ளது. பொது விழிப்புணர்வு மற்றும் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக, அல்வா விநியோகத்தை சுருக்கமாக புகைப்படம் அல்லது வீடியோ மூலம் ஆவணப்படுத்துவதை உறுதி செய்யுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த உத்தரவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இளைஞர்கள் தேர்தலில் அதிகமாக வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை செயல்படுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது

# டெல்லி மெட்ரோ ரெயில் நிலையத்தில் தேச விரோத வாசகங்களுடன் சுவரொட்டி: பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவாளி கைது

புதுடெல்லி, ஏப்.2:

டெல்லி மெட்ரோ ரெயில் நிலையத்தில் தீவிரவாதத்திற்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்டிய பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவாளி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

டெல்லியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10-ந்தேதி நடந்த கார் குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து, டெல்லி போலீசார் குற்றச்செயல் தடுப்பு நடவடிக்கையில் தீவிர கவனம் செலுத்தி உள்ளனர். இந்த நடவடிக்கையில் கடந்த மாத தொடக்கத்தில் ஒரு பயங்கரவாத கும்பலை தேட தொடங்கினார்கள். முன்னதாக டெல்லியில் உள்ள ஒரு மெட்ரோ ரெயில் நிலைய பகுதியில் தேச விரோத வாசகங்களுடன் (காஷ்மீர் தொடர்பானது) கூடிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன.

டெல்லி கார் வெடிப்பு சம்பவத்துக்கு முன்னதாகவும் இதுபோன்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் இந்த சுவரொட்டி விவகாரத்தை டெல்லி சிறப்பு பிரிவு போலீசார் விசாரித்தனர்.

விசாரணையில் கொல்கத்தாவை சேர்ந்த உமர் பாரூக், ரோபில் உல் இஸ்லாம் ஆகிய 2 பேருக்கு இதில் தொடர்பு இருந்தது கண்டறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து டெல்லி போலீசார் கொல்கத்தா சென்று அவர்களை கைது செய்தனர்.

# உலகின் முன்னணி கல்வி நிறுவனமாக மீண்டும் நாளந்தா: குடியரசுத் தலைவர் முர்மு நம்பிக்கை




புதுடெல்லி, ஏப்.2:

உலக அளவில் முன்னணி கல்வி நிறுவனமான நாளந்தா பல்கலைக்கழகம் மீண்டும் உருவாகும் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிகார் மாநிலம் நாளந்தா மாவட்டம் ராஜ்கிர் பகுதியில் உள்ள நாளந்தா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு செவ்வாய்க்கிழமை கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:


நிகழாண்டு நாளந்தா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற மாணவர்களில் பாதிக்கும் அதிகமானோர் 30-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.

பண்டைய நாளந்தா பல்கலைக்கழகம் சுமார் 8 நூற்றாண்டுகளாக மாபெரும் அறிவு மையமாக விளங்கியது. அதன் வீழ்ச்சியானது இந்தியாவுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகுக்கும் பேரிழப்பாக அமைந்தது.

தற்போது இந்தப் பல்கலைக்கழகம் புத்துயிர் பெற்றுள்ளது, அதன் மரபை நவீனச் சூழலில் மீட்டெடுப்பதற்கான தேசிய மற்றும் சர்வதேச அர்ப்பணிப்பின் அடையாளமாகும்.

உலகம் பல சிக்கலான சவால்களை சந்தித்து வருகிறது. அதேவேளையில் கருணைமிக்க, சுதந்திரமான, எதையும் ஆராய்ந்து வலுவாக முடிவு எடுப்பதற்கான சிந்தனையும் தேவைப்படுகிறது. இந்தச் சூழலில் உலக அளவில் முன்னணி கல்வி நிறுவனமான நாளந்தா பல்கலைக்கழகம் மீண்டும் உருவாகும் என்ற நம்பிக்கை உள்ளது. அதே நேரத்தில், இந்தப் பல்கலைக்கழக முன்னேற்றத்தின் பலன்கள், பிகார் சமுதாயத்தையும் சென்றடைய வேண்டும் என்று தெரிவித்தார்.

# 2026-27-ஆம் ஆண்டுக்கான வருமான வரி தாக்கல் படிவங்கள் வெளியீடு- தனிநபர்கள் தாக்கல் செய்ய ஜூலை 31 கடைசி




புதுடெல்லி, ஏப்.2:

சிறு மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான படிவம் 1 முதல் 4 வரையிலான வருமான வரிக் கணக்கு தாக்கல் படிவங்கள் திங்கள்கிழமை அறிவிக்கை செய்யப்பட்ட நிலையில், புதுப்பிக்கப்பட்ட வருமான வரி தாக்கல் செய்வதற்கான படிவங்கள் 2, 3, 5, 6 மற்றும் 7 வரையிலான படிவங்கள் செவ்வாய்க்கிழமை அறிவிக்கை செய்யப்பட்டன.

அதன்படி, தனிநபர்களும், வர்த்தகர்கள் மற்றும் பிற துறை சார்ந்தவர்கள் 2025-26-ஆண்டில் ஈட்டிய வருவாய்க்கான கணக்கைத் தாக்கல் செய்யத் தொடங்கலாம் என வருமான வரித் துறை தெரிவித்துள்ளது.

தனிநபர்கள் மற்றும் தங்களின் கணக்கை தணிக்கை செய்யத் தேவையில்லாதவர்களும் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய ஜூலை 31 கடைசி நாளாகும். ஆண்டு வருவாய் ரூ. 50 லட்சம் வரை உள்ள இந்தியாவில் வசிக்கும் தனி நபர்கள் படிவம் 1-ஐ (சஹஜ்) தாக்கல் செய்யலாம். இவர்கள் ஊதியம், ஒரு குடியிருப்பு, பிற வளங்கள் (வட்டி) மற்றும் ஆண்டுக்கு ரூ. 5,000 வரையிலான வேளாண் வருமானம் ஆகியவற்றின் மூலம் வருவாய் ஈட்டுபவர்களாக இருக்க வேண்டும். தொழில் மற்றும் பணிசார் சேவைகள் மூலம் ஆண்டுக்கு ரூ. 50 லட்சம் வரை வருவாய் ஈட்டும் தனிநபர்கள், ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் மற்றும் நிறுவனர்கள் படிவம் -4-ஐ (சுகம்) தாக்கல் செய்யலாம்.

வர்த்தகம் மூலம் கிடைக்கும் லாபம் மற்றும் ஆதாயங்களில் இருந்து அல்லாமல், மூலதன ஆதாயங்களிலிருந்து வருவாய் ஈட்டும் தனி நபர்கள் மற்றும் ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் படிவம் 2-ஐ தாக்கல் செய்ய வேண்டும். தனி உரிமையுடைய வர்த்தகம் அல்லது தொழில் மூலம் வருவாய் ஈட்டும் தனி நபர்கள் மற்றும் ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் படிவம் 3-ஐ தாக்கல் செய்ய வேண்டும். நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் கூடிய வர்த்தக பங்குதாரர்கள், கூட்டுறவு சங்கங்கள் படிவம் 5-ஐ தாக்கல் செய்ய வேண்டும். நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் படிவம் 6, அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் படிவம் 7-ஐ தாக்கல் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடக எம்.பி., எம்எல்ஏ.க்களுக்கு ஐபிஎல் டிக்கெட் இலவசம்

பெங்களூரு, ஏப்.2:

கர்நாடக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவரும் மூத்த பாஜக தலைவருமான ஆர்.அசோகா பேசும்போது, "ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளை சின்னசாமி மைதானத்தில் நடத்துவதற்கு நாம் அனுமதி தருகிறோம்.

இலவசமாக நீர், மின்சாரம், போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறோம். ஆனால், கிரிக்கெட் போட்டிகளை பார்ப்பதற்கு நமக்கு இலவசமாக டிக்கெட் தருவதில்லை. ஆயிரக்கணக்கில் கட்டணம் வசூலிக்கிறார்கள்" என கூறினார். இந்நிலையில் கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார் கூறுகையில், "ஆர்சிபி அணியின் ஐபிஎல் போட்டிகளுக்கு தலா 3 டிக்கெட்கள் எம்பி, எம்எல்ஏ.க்களுக்கு வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

# ஏழுமலையானை தரிசித்த ஆளுநர் அப்துல் நசீர்

திருமலை, ஏப்.2:

ஆந்திர ஆளுநராக அப்துல் நசீர் பொறுப்பேற்ற பிறகு அடிக்கடி திருப்பதி வந்து செல்கிறார். அப்போது திருப்பதி ஏழுமலையான் கோயில் மற்றும் திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலுக்கு சென்று பக்தியுடன் தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

இந்நிலையில் அவர் ஏழுமலையானை தரிசனம் செய்ய நேற்று காலையில் தனது குடும்பத்தாருடன் கோயிலுக்கு வந்தார். கோயில் வாசலில் அவருக்கு பூரண கும்பமரியாதை அளித்து அதிகாரிகள் வரவேற்றனர். இதையடுத்து ஏழுமலையானை ஆளுநர் அப்துல் நசீர் தரிசனம் செய்தார்.

# டெல்லியின் முக்கிய கோயில்களை தாக்க திட்டமிட்ட லஷ்கர் கமாண்டர் ஷபீர் அகமது லோன் கைது

புதுடெல்லி, ஏப்.2

இந்தியாவால் மிகவும் தீவிரமாக தேடப்படும் தீவிரவாதிகளில் ஒருவர் லஷ்கர்-இ-தொய்பா கமாண்டர் ஷபீர் அகமது லோன். இவர், தமிழ்நாட்டின் திருப்பூர், மேற்கு வங்கத்தின் மால்டா மற்றும் டெல்லியில் இருந்து இளைஞர்களைத் திரட்டியுள்ளார். சந்தேகத்தைத் தவிர்க்க, தென்னிந்தியாவில் வசிப்பவர்களை வட இந்தியாவில் தாக்குதல் நடத்தவும், வட இந்தியர்களை தெற்கில் பயன்படுத்தவும் அவர் திட்டமிட்டிருந்தார். அவர் நியமித்த நபர்கள் பல இடங்களை உளவு பார்த்துள்ளனர். நீண்ட கால இடைவெளியில் தொடர் குண்டு வெடிப்புகளை நடத்துவதே இவர்களது திட்டமாக இருந்துள்ளது. இதேபோல், மேற்கு வங்கத்தில் சட்ட விரோதமாக வசிக்கும் வங்கதேசத்தினரைத் திரட்டி, குறிப்பாகக் கோயில்களை உளவு பார்க்க அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். டெல்லி சாந்தினி சவுக்கில் உள்ள கவுரி சங்கர் கோயில் மற்றும் கல்காஜி கோயில்களை உளவு பார்க்க லோன் உத்தரவிட்டது விசாரணையில் உறுதியானது. நேபாளத்தில் இருந்து செயல்பட்டு வந்த லோன், தனது கூட்டாளிகளின் கைதால் அதிர்ச்சியடைந்து, நிலைமையைச் சீரமைக்க இந்தியாவுக்குள் நுழைய முயன்றுள்ளார். இதை கண்காணித்து வந்த டெல்லி போலீஸின் சிறப்புப் படையினர் காசிப்பூரில் வைத்து அவரை கைது செய்துள்ளனர். இதன் மூலம் மிகப்பெரிய அளவிலான தீவிரவாத தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது.

# 11 முக்கிய கனிம வள பகுதிகளுக்கான ஏலம் ரத்து: மத்திய அரசு அறிவிப்பு



புதுடெல்லி, ஏப்.2:

11 முக்கிய கனிம வள பகுதிகளுக்கான ஏலம் ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு செவ்வாய்க்கிழமை அறிவித்தது. ஏலத்தில் பங்கேற்க நிறுவனங்கள் ஆர்வம் காட்டாததால் மத்திய அரசு ரத்து செய்தது.

இதுதொடர்பாக மத்திய சுரங்க அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், '5 கனிம வள பகுதிகளை ஏலத்தில் எடுப்பதற்கு விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. மேலும் 5 பகுதிகளுக்கு மூன்றுக்கும் குறைவான நிறுவனங்களே ஏல விண்ணப்பத்தை சமர்ப்பித்தன. எனவே, 10 கனிம வள பகுதிகளுக்கான ஏலம் ரத்து செய்யப்படுகிறது. இத்துடன் மேற்கு வங்கத்தில் உள்ள பேகுவில் அரிய கனிம வள பகுதிக்கான ஏலமும் ரத்து செய்யப்படுகிறது' எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஆந்திரம், சத்தீஸ்கர், கர்நாடகம், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரம், தெலங்கானா உள்ளிட்ட 13 மாநிலங்களில் 23 கனிம வள பகுதிகளுக்கான 6-ஆம் சுற்று ஏல நடைமுறையை சுரங்க அமைச்சகம் தொடங்கியது.

இந்தப் பகுதிகளில் லித்தியம், கோபால்ட், அரிய கனிமங்கள், நியோபியம், டான்டலம், வனேடியம் உள்ளிட்ட கனிமங்கள் உள்ளன. முன்னதாக, 46 கனிம வள பகுதிகளுக்கான ஏல நடைமுறை நிறைவடைந்தது. முந்தைய சுற்றுகளிலும் பல்வேறு கனிம வள பகுதிகளுக்கான ஏலம் ரத்து செய்யப்பட்டது.

# குஜராத்தில் ரூ.3,300 கோடியில் செமி கண்டக்டர் ஆலை: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



அகமதாபாத், ஏப்.2:

குஜராத் மாநிலம் அகமதாபாத் அருகே உள்ள சனந்த் ஜிஐடிசி வளாகத்தில், கெய்ன்ஸ் செமிகான் நிறுவனத்தின் ரூ.3,300 கோடி மதிப்பிலான செமி கண்டக்டர் உற்பத்தி ஆலையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

இந்திய செமி கண்டக்டர் திட்டத்தின் (ஐஎஸ்எம்) கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில், மைக்ரான் டெக்னாலஜி நிறுவனத்துக்கு அடுத்தபடியாக வணிகரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் 2-வது பெரிய ஆலை இதுவாகும். இது, இந்தியாவின் உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதோடு, சிப் உற்பத்தியில் நமது நாட்டை உலகளவில் முக்கிய மையமாக மாற்றுவதற்கான இலக்கை அடைவதை துரிதமாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் கூறியுள்ளதாவது: கெய்ன்ஸ் செமிகான் ஆலை திறப்பு, தற்சார்பு இந்தியா நோக்கிய நமது பயணத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இது நாட்டில் வலுவான செமிகண்டக்டர் உற்பத்திச் சூழலை உருவாக்குவதில் ஒரு மைல்கல்லாகும். இந்த ஆலையில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் செமி கண்டக்டர் கட்டமைப்பு எந்த வேகத்தில் வளர்ந்து வருகிறது என்பதற்கான சான்றாக அமைந்துள்ளது. இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார். குஜராத்தில் ஆலையைத் தொடங்கி வைத்த பிறகு, அங்கு பணியாற்றும் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

**தினமும் 63 லட்சம் யூனிட்:** இந்த ஆலையில் முதற்கட்டமாக மேம்படுத்தப்பட்ட 'இன்டெலிஜென்ட் பவர் மாட்யூல்' (ஐபிஎம்) உற்பத்தி செய்யப்படவுள்ளது. இவை வாகனங்கள் மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்குத் தேவையான முக்கியமான பாகங்களாகும். ஒவ்வொரு மாட்யூலிலும் 17 சிப்கள் இருக்கும். இவை கலிபோர்னியாவைச் சேர்ந்த ஆல்பா மற்றும் ஒமேகா செமி கண்டக்டர் நிறுவனத்துக்கு விநியோகிக்கப்பட உள்ளன. இந்த ஆலையின் அனைத்துக் கட்டப் பணிகளும் நிறைவடையும் போது, நாளொன்றுக்கு 6.33 மில்லியன், அதாவது சுமார் 63 லட்சம் யூனிட்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக விளங்கும்.

# ஏப். 3-இல் பிரதமர் மோடி வருகை: புதுச்சேரியில் ட்ரோன்கள் பறக்க தடை

புதுடெல்லி, ஏப்.2

பிரதமர் நரேந்திர மோடி தேர்தல் பிரசாரத்துக்கு வெள்ளிக்கிழமை (ஏப்.3) வருவதை முன்னிட்டு, புதுச்சேரியில் ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி புதுச்சேரி வருகையின்போது ட்ரோன்கள் பறக்கத் தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்க, மாவட்ட நிர்வாகத்துக்கு காவல் கண்காணிப்பாளர் கோரிக்கை வைத்திருந்தார். அதன்படி, புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அ.குலோத்துங்கன், பிரதமர் வருகை மற்றும் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளில்லா வான்வழி கருவிகள் புதுச்சேரியில் பறக்க தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும், ட்ரோன்கள், பலூன்கள் போன்றவை மூலம் எவ்வித வான்வழி புகைப்படம் அல்லது விடியோ பதிவு மேற்கொள்ளவும் தடை செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிப் பகுதிகள் ட்ரோன்கள் பறக்கத் தடைசெய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை திங்கள்கிழமை இரவு ஆட்சியர் குலோத்துங்கன் பிறப்பித்துள்ளார்.

# சீனாவில் தயாரிக்கப்பட்ட சிசிடிவி கேமரா விற்பனைக்கு தடை

புதுடெல்லி, ஏப்.2:

இந்தியாவில் விற்பனை செய்யப்படும் சிசிடிவி. கேமராக்களில் மூன்றில் ஒரு பங்கு சீனா தயாரிப்புகள் ஆகும். குறிப்பாக ஹிக் விஷன், தகுவா மற்றும் டிபி-லிங்க் போன்ற சீன நிறுவனங்களின் தயாரிப்புகள் இந்திய சந்தையில் அதிகளவில் விற்பனையாகின்றன. இந்நிலையில், சிசிடிவி கேமராக்களின் பாதுகாப்பு தரத்தை கடுமையாக்குவதற்காக தர பரிசோதனை சான்றிதழ் (எஸ்டிக்யூசி) பெறுவது கட்டாயம் என்ற புதிய விதிமுறையை மத்திய அரசு நாளை முதல் அமல்படுத்த உள்ளது. சீன தயாரிப்பு சிப்கள் பொருத்தப்பட்ட சிசிடிவி கேமராக்களுக்கு, இந்த விதிமுறைப்படி தரச் சான்றிதழ் மறுக்கப்படும். எஸ்டிக்யூசி ஒப்புதல் இல்லாமல், சிசிடிவி கேமராக்களை இந்திய சந்தையில் விற்பதற்கு நாளை முதல் தடை விதிக்கப்படுகிறது. இந்த தடை சீன தயாரிப்புகளின் விற்பனைக்கு பலத்த அடியாக இருக்கும். இதனால் உள்நாட்டு தயாரிப்புகளின் விற்பனை அதிகரிக்கும். சிபி பிளஸ், க்யூபோ, பிரமா, மேட்ரிக்ஸ் மற்றும் ஸ்பார்ஷ் போன்ற உள்நாட்டு தயாரிப்பு சிசிடிவி கேமராக்கள் விற்பனை விரிவடையும். இந்த நிறுவனங்கள் சீனாவின் உதிரி பாகங்களை சார்ந்திருக்காமல், தைவான் சிப்கள் மற்றும் உள்நாட்டு பொருட்களை வாங்கும் நிலை ஏற்படும்.

# ரத்த வங்கிகளின் செயல்பாடு: தேசிய அளவில் கண்காணிக்கத் திட்டம்

புதுடெல்லி, ஏப்.2:

நாட்டில் உள்ள அனைத்து ரத்த வங்கிகளும், தங்கள் கையிருப்பில் உள்ள ரத்த அலகுகள் மற்றும் ரத்த கூறுகளை, 'இ ரக்த்கோஷ்' இணையதளத்தில் பதிவு செய்வதை மத்திய அரசு கட்டாயமாக்கி உள்ளது.

இந்தியாவில் உள்ள அனைத்து ரத்த வங்கிகள், சேமிப்பு நிலையங்களைக் கண்காணித்து ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான ஒழுங்குமுறை கூட்டம், மத்திய சுகாதார அமைச்சகத்தின் சார்பில் அண்மையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் சுட்டிக்காட்டி, அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய சுகாதார துறை அமைச்சகம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

மாநிலத்தில் உள்ள ரத்த வங்கிகள் செயல்பாடுகளில் வெளிப்படை தன்மை இருப்பது உறுதி செய்ய வேண்டும். இருப்பில் உள்ள ரத்த அளவுகளின் விவரங்களைத் துல்லியமாக அறிந்துகொள்வதற்கும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்படி, மாநில அளவிலான சுகாதார அதிகாரிகள், அங்கீகாரம் பெற்ற அனைத்து ரத்த வங்கிகளையும், மத்திய அரசின், 'இ ரக்த்கோஷ்' என்ற இணையதளத்தில் பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, ரத்த அலகுகள் கையிருப்பு மட்டுமல்லாது, ரத்த கூறுகளின் இருப்புகளையும் உடனுக்குடன் பதிவுசெய்வது கட்டாயம். இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் உரிய அறிவுறுத்தல் வழங்க வேண்டும். இதன் வாயிலாக, மருத்துவ சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் ரத்தம், ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை உறுதி செய்ய முடியும். மேலும், அவசர நேர ரத்த தேவைகளினால், நோயாளிகளையும் காப்பாற்ற முடியும்.




# திருச்சி திருவெறும்பூர் அருகே திமுக கவுன்சிலர் மர்ம கும்பலால் படுகொலை



**திருச்சி, ஏப்.02:** திருவெறும்பூர் அருகே திமுக கவுன்சிலர் கொலை செய்யப்பட்டது சம்பவம் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கொலையாளிகளை பிடிக்க 8 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சியை அடுத்த திருவெறும்பூர் அருகேயுள்ள கூத்தைப்பார் பேரூராட்சிக்கு உட்பட்ட பாரதிபுரத்தைச் சேர்ந்தவர் அந்தோணிசாமி மகன் ரஞ்சித்குமார் (38). திமுக இளைஞரணியில் கூத்தைப்பார் பேரூர் செயலாளராகவும், பேரூராட்சி 11-வது வார்டு கவுன்சிலராகவும் இருந்தார்.

மேலும், திருவெறும்பூர் அரசு ஐடிஐ எதிரே உள்ள டாஸ்மாக் கடையில் பார் நடத்தி வந்தார். இந்நிலையில், திருவெறும்பூரில் இருந்து நவல்பட்டு செல்லும் சாலையில் புதுத் தெரு பகுதியில் ரஞ்சித்குமார் நேற்று முன்தினம் இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

தகவலறிந்து நவல்பட்டு போலீஸார் அங்கு சென்று ரஞ்சித்குமார் உடலை மீட்டு, பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மாவட்ட எஸ்.பி. செல்வநாக ரத்தினம் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மோப்ப நாய் காவிரி வரவழைக்கப்பட்டு போலீஸார் சோதனை நடத்தினர். மேலும், தடயவியல் நிபுணர்களும் ஆய்வு செய்தனர்.

அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை போலீஸார் ஆய்வு செய்ததில், 3 இருசக்கர வாகனங்களில் வந்த 9 பேர், ரஞ்சித்குமாரை வெட்டிக் கொன்றதும், அதில் இருந்த பலரும் சிறார் போன்று இருந்ததும் தெரிய வந்தது.

இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து கொலைக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர்.

மேலும், 8 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, கொலையாளிகளை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட ரஞ்சித்குமாருக்கு மனைவி, 2 மகள்கள், ஒரு மகன் உள்ளார்.

# பூந்தமல்லி தவெக வேட்பாளர் பாலியல் தொல்லை அளித்ததாக எஸ்.பி. அலுவலகத்தில் மகளிரணி நிர்வாகி புகார்




**திருவள்ளூர், ஏப்.02:** பூந்தமல்லி சட்டப்பேரவை தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் தனக்கு பாலியல் தொல்லை அளித்ததாக, அக்கட்சியின் மகளிர் அணி நிர்வாகி திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளராக இருப்பவர் பிரகாசம் என்கிற குட்டி. இவரை நேற்று முன் தினம் பூந்தமல்லி (தனி) தொகுதியின் தமிழக வெற்றிக் கழக வேட்பாளராக, அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்தார்.

இந்நிலையில், பிரகாசம் தனக்கு பாலியல் தனக்கு பாலியல் தொல்லை அளித்ததாக, அக்கட்சியின் மகளிர் அணி நிர்வாகி நேற்று திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் அளித்த புகாரில் தெரிவித்துள்ளதாவது: தமிழக வெற்றிக் கழகத்தின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட மகளிர் அணி நிர்வாகியாக நான் இருந்து வருகிறேன்.

இந் நிலையில், கடந்த ஜூன் 8-ம் தேதி திருவள்ளூரில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் நடந்த எங்கள் கட்சி நிர்வாகியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் பங்கேற்றார்.

அந்நிகழ்வில் நானும் பங்கேற்றேன். அப்போது, விழா மேடையில், எங்கள் கட்சியின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளர் பிரகாசம் அருகில் நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது, பிரகாசம் எனக்கு பாலியல் தொல்லை கொடுத்தார்.

இதுகுறித்து, தட்டிக்கேட்ட என் கணவருக்கும், எனக்கும் பிரகாசம் கொலை மிரட்டல் விடுத்தார். இதுதொடர்பாக எங்கள் கட்சியின் தலைமையிடம் புகார் அளித்துள்ளேன்.

ஆனால், அவர் மீது கட்சி தலைமை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, பிரகாசம் மீது வழக்குப் பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் புகாரில் தெரிவித்துள்ளார்.

இப்புகாரை மறுத்து, பிரகாசத்தின் மனைவி சுகுணா, மகளிர் அணி நிர்வாகிகள் திருவள்ளூர் எஸ்.பி. அலுவலகத்தில் நேற்று மனு அளித்தனர்.

அதில், “தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட மகளிர் அணியின் முக்கிய நிர்வாகி பதவியை வாங்கி தரக் கோரி, மகளிர் அணி நிர்வாகி பிரகாசத்திடம் பிரச்சினை செய்து வந்தார்.

அப்பதவியை வாங்கி தராததால் பிரகாசம் மீது அவர் பொய்யான புகார் தெரிவித்துள்ளார். கட்சியில் உள்ள ஒரு சிலரே பிரகாசத்துக்கு எதிராக அந்த பெண் நிர்வாகியை தூண்டி விட்டுள்ளனர். ஆகவே, பொய்யான புகார் கொடுத்த பெண் நிர்வாகி மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில் தண்டவாளத்தில் தலை வைத்து படுத்த நடிகர் மன்சூர் அலிகான் மீது வழக்குப் பதிவு



**திருச்சி, ஏப்.02:** திருச்சி லால்குடி தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில், கல்லக்குடி ரயில் நிலையப் பகுதிகளில் நேற்று முன்தினம் வாக்கு சேகரித்த அவர், திடீரென ரயில் நிலையத்துக்குள் சென்று, கல்லக்குடி என்ற பெயர்ப்பலகை முன்பு ரயில் தண்டவாளத்தில் தலை வைத்து படுத்தார். அந்நேரத்தில் அந்த தடத்தில் ரயில் எதுவும் வரவில்லை.

அதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மன்சூர் அலிகான், “வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை நினைவுகூரும் வகையில் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவாக தண்டவாளத்தில் தலைவைத்து படுத்தேன்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி ஆகியோரை சந்தித்து தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கேட்டேன். இருவரும் தராததால் இங்கு சுயேச்சையாக போட்டியிடுகிறேன் என்றார்.

இந்நிலையில், ரயில் நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்ததற்காக திருச்சி ரயில்வே பாதுகாப்புப் படை போலீஸார், நடிகர் மன்சூர் அலிகான் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# சேப்பாக்கம் தொகுதியில் ரூ.2.50 கோடி பறிமுதல்: பறக்கும்படை அதிகாரிகள் நடவடிக்கை



**சென்னை, ஏப்.02:** உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.2.50 கோடி பணத்தை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நேற்று மாலை 5 மணியளவில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட மயிலாப்பூர் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.


அப்போது, அந்த வழியாக வந்த வாகனம் ஒன்றை மறித்து சோதித்தனர்.

அதில், கட்டுக்கட்டாக ரூ.2.50 கோடி பணம் இருந்தது தெரிந்தது. அதுகுறித்து விசாரித்தபோது, அந்த பணம் ஏடிஎம் இயந்திரங்களில் நிரப்புவதற்காக கொண்டு செல்லப்பட்ட பணம் என வாகனத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர். ஆனால், பணத்துக்கான ஆவணங்கள் அவர்களிடம் இல்லை.

இதையடுத்து, அந்த பணத்தை பறிமுதல் செய்து, வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். ரூ.1.91 கோடி பறிமுதல் சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் 3 பறக்கும் படைகள் என்ற வீதம், 48 பறக்கும் படைகளும், 3 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் என்ற வீதம், 48 நிலையான கண்காணிப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு, மூன்று சுழற்சி முறைகளில் பணிகளை மேற்கொள்வர்.

இந்த குழுக்கள் தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணிக்கும். அதன்படி, வாகன சோதனையின்போது பறக்கும் படை குழுவால் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரொக்கப் பணம் மயிலாப்பூர் சட்டப்பேரவைத் தொகுதியில் ரூ.75ஆயிரம் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினரால் ராயபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் ரூ.1.91கோடி என மொத்தம் ரூ.1 கோடியே 91 லட்சத்து 75ஆயிரம் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பரந்தூர் விமான நிலையத் திட்ட நிலங்களில் சாகுபடி: நெல் கொள்முதலில் சிக்கல்; விவசாயிகள் வேதனை



**காஞ்சிபுரம், ஏப்.02:** பரந்தூர் புதிய விமான நிலையத் திட்டத்துக்காக நிலம் வழங்கிய விவசாயிகள், தற்போது விளைவித்துள்ள நெல்லை அரசு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் விமான நிலையத் திட்டத்துக்காகப் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலங்களை அரசுக்கு வழங்கி உள்ளனர்.

இதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்ட நிலையில், அந்த நிலங்கள் வருவாய்த் துறையினரால் அரசு நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இருப்பினும், திட்டப் பணிகள் முழுமையாகத் தொடங்காத நிலையில், அந்த நிலங்களில் விவசாயிகள் தொடர்ந்து நெல் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது அறுவடை முடிந்து, விளைவித்த நெல்லை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் கொண்டு செல்கின்றனர்.

அங்கு நெல்லை விற்பனை செய்ய ‘அடங்கல்’ சான்றிதழ் கட்டாயம் எனக் கேட்கப்படுகிறது.

நிலங்கள் அரசு பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டதால், கிராம நிர்வாக அலுவலர்களிடம் அடங்கல் சான்றிதழ் பெறுவதில் பெரும் சிக்கல் நீடிக்கிறது.

அரசு கொள்முதல் நிலையங்களில் விற்க முடியாததால், வேறு வழியின்றி தனியார் வியாபாரிகளிடம் மிகக் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தங்களுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துவதாக அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

எனவே, பரந்தூர் விமான நிலையத் திட்டப் பகுதி விவசாயிகள் தங்களது நெல்லை எவ்விதத் தடையுமின்றி அரசு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய, மாவட்ட நிர்வாகம் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளார் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்கக் கோரி, தமிழ்நாடு அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டியக்கம் சார்பில் அதன் மாநிலத் தலைவர் கே.எழிலன் தலைமையில் நேற்று ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

அதில், நெல் மூட்டைகளைப் பெறுவதற்கு பணம் கேட்பது, இடைத்தரகர்கள் மூலம் முறையற்ற வசூல் நடப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டது. நெல் கொள்முதல் நிலையங்களை உழவர் உற்பத்தியாளர் குழுக்களிடம் ஒப்படைக்க கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

# கல்வி தரம், பேராசிரியர்களின் திறன் குறித்து மாணவர்கள் ஆன்லைனில் கருத்து தெரிவிக்கலாம்




**சென்னை, ஏப்.02:** நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் கல்வியின் தரம், பேராசிரியர்களின் திறமை குறித்து அங்கு படிக்கும் மாணவர்கள், ஆன்லைனில் கருத்து தெரிவிக்கலாம் என்று தேசிய மருத்துவ ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, தேசிய மருத்துவ ஆணையத்தின் (என்எம்சி) செயலர் மருத்துவர் ராகவ் லங்கர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தேசிய மருத்துவ ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ், நாடு முழுவதும் இயங்கும் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் குறித்து இணையதளம் மூலம் கருத்தறியும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இளநிலை மருத்துவ மாணவர்கள் அனைவரும் ஆணையத்தின் இணையதளத்தில் தங்களின் கருத்துகள், தகவல்களைப் பதிவு செய்யலாம். கல்வித் தரம், பேராசிரியர்களின் எண்ணிக்கை, அவர்களது பயிற்றுவிக்கும் திறன், செயல்முறை விளக்கங்கள், ஆய்வக வசதிகள், மருத்துவமனை கட்டமைப்பு என பல்வேறு விஷயங்கள் குறித்து கருத்து தெரிவிக்கலாம்.

அவை அனைத்தும் ரகசியமாக பாதுகாக்கப்பட்டு, மருத்துவக் கல்லூரிகளை மதிப்பீடு செய்யும் போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் 2,205 துப்பாக்கிகள் காவல் துறையிடம் ஒப்படைப்பு

**சென்னை, ஏப்.02:** தேர்தலை முன்னிட்டு, உரிமம் பெற்று வைத்துள்ள 2,205 பேர், தங்களது துப்பாக்கிகளை போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பாதுகாப்பு கருதி தொழிலதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், திரை பிரபலங்கள் உள்பட பல்வேறு தரப்பினர் போலீஸாரின் அனுமதி பெற்று துப்பாக்கிகள் வைத்திருப்பார்கள்.

அதன்படி, சென்னையில் 2,735 பேர் வைத்துள்ளனர். இவர்களில் 500 பேர் விளையாட்டு மற்றும் பாதுகாப்பு சேவை உள்பட பல்வேறு காரணங்களுக்காக வைத்துள்ளனர். தேர்தல் நேரங்களில் உரிமம் பெற்று வைத்துள்ளவர்கள் அந்த துப்பாக்கிகளை காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால், விளையாட்டு மற்றும் சேவை துறையில் வைத்திருப்பவர்கள் துப்பாக்கிகளை ஒப்படைக்க தேவையில்லை.

இதற்கிடையே, 2,205 பேர் துப்பாக்கிகளை ஒப்படைத்த நிலையில் 30 பேர் தங்களிடமுள்ள துப்பாக்கிகளை உடனடியாக ஒப்படைக்க வேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எண்ணூர் நிலக்கரி கிடங்கில் தீ விபத்து: 5 சதவீத நிலக்கரி சேதம்



**சென்னை, ஏப்.02:** எண்ணூர் நிலக்கரி கிடங்கில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 5 சதவீத நிலக்கரி சேதமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையை அடுத்த எண்ணூர் மற்றும் அத்திப்பட்டு பகுதியில் தமிழக மின்வாரியத்துக்கு சொந்தமான அனல்மின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த அனல்மின் நிலையங்களுக்காக நிலக்கரி எண்ணூரில் உள்ள கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்த நிலக்கரி கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து, நிலக்கரி மையத்தில் உள்ள தீயணைப்பு வாகனங்கள் மற்றும் மணலி, மாதவரம், எண்ணூர், எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி உள்ளிட்ட தீயணைப்பு நிலையங்களில் இருந்து வாகனங்கள் கொண்டு வரப்பட்டு தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இதையடுத்து, காலை 6 மணிக்குள் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழ்நாடு மின்வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, அதிகாரிகளிடம் சேத விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இந்த சம்பவத்தால் மின் உற்பத்தியில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. ஆரம்பக்கட்ட கணிப்பின் படி சேதம் 5 சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. உள்நாட்டு நிலக்கரி 28 நாட்களுக்கு போதுமான அளவில் கையிருப்பில் உள்ளது.

மகாநதி மற்றும் சிங்கரேணி நிலக்கரி சுரங்கங்களிலிருந்து தொடர்ந்து நிலக்கரி கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 10 கப்பல்கள் மூலம், சீராக நிலக்கரி விநியோகம் உள்ளது.

மேலும், இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி 75 நாட்களுக்கு போதுமான அளவில் கையிருப்பில் உள்ளது. உயிரிழப்பு, காயம் எதுவும் இல்லை.

மொத்தம் 11 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 19 டேங்கர்கள் பயன்படுத்தப்பட்டு தீ அணைக்கப்பட்டது. தீயணைப்புத் துறை, மெட்ரோ வாட்டர் உள்ளிட்ட அனைத்து துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாடு மூலம் நிலைமை திறம்பட கையாளப்பட்டது.

தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

# விமானம் மூலம் முட்டை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை: கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் தகவல்



**நாமக்கல், ஏப்.02:** மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக விமானம் மூலம் முட்டை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நாமக்கல்லில் தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தின் செயலாளர் சுந்தர்ராஜன், முட்டை ஏற்றுமதி சங்க செயலாளர் வல்சன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ராசிபுரத்தில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் கோடை வெப்பம் காரணமாக கோழிகள் அதிகளவில் இறந்தன.

மக்களுக்கு பாதிப்பாகாத வகையில் அவற்றை முறையாக அகற்றம் செய்ய பண்ணை உரிமையாளருக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டலத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு எதுவும் இல்லை.

பண்ணைகளில் 21 நாட்களுக்கு ஒரு முறை கோழிகளின் ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்படுகின்றன. பறவைக் காய்ச்சல் பாதிப்பின்மை காரணமாக ஏற்றுமதி நடைபெறுகிறது.

மத்திய கிழக்காசிய நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக கப்பல் போக்குவரத்து குறைந்துள்ளது. இதனால் முட்டை ஏற்றுமதியும் குறைந்துள்ளது. எனவே கார்கோ விமானம் மூலம் முட்டை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளையில் கப்பல்கள் மூலம் ஓரிரு கன்டெய்னர்களில் முட்டைகள் ஏற்றுமதி நடைபெற்று வருகிறது. போர் பதற்றம் தணிந்தால் முட்டை ஏற்றுமதிசீராகும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பங்குனி கோடை வசந்த உற்சவம்



மதுரை அருள்மிகு மீனாட்சி_சுந்தரேஸ்வரர்_ திருக்கோயில் பங்குனி கோடை_வசந்த உற்சவம் 2026-நிறைவு-31.03.2026-9ம் நாள் மாலை வெள்ளி

## ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம சுவாமி திருமஞ்சனம் திவ்ய சேவை.



பெங்களூரு பாலேபேட்டை ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம சுவாமி திருமஞ்சனம் திவ்ய சேவை.

## அரியலூரில் அமைச்சர் சிவசங்கர் காரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை



**அரியலூர், ஏப்.02:** அரியலூரில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் சென்ற காரை வழி மறித்த தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் சார்பில் அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் என இரு தொகுதிகளுக்கு தலா 9 கண்காணிப்பு குழுக்களும், 9 பறக்கும் படையும் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் 3 வேளையும் வாக்காளர்களுக்கு ஏதேனும் பணம் பட்டுவாடா செய்ய சட்ட விரோதமாக பணம் கொண்டு செல்லப்படுகிறதா, தேர்தல் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்து கண்காணிக்கப் பட்டு வருகிறது.

இந்நிலையில் அரியலூரில் இருந்து திருமானூர் செல்லும் சாலையில் அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர் இன்று தனது காரில் சென்றார். அப்போது, கீழப்பழுவூர் பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த தேர்தல் பறக்கும் படை அலுவலர் நிர்மல்ராஜ் தலைமையிலான குழுவினர், அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் காரை மறித்து சோதனையில் ஈடுபட்டனர்.

பறக்கும் படையினரின் சோதனைக்கு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்.

மேலும், சோதனையில் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் எதுவும் இல்லாததால், அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கார் செல்ல தேர்தல் பறக்கும் படையினர் அனுமதித்தனர். இதையடுத்து அமைச்சர் அங்கிருந்து சிவசங்கர் புறப்பட்டுச் சென்றார்.

# 1000 பேருந்து நிறுத்த நிழற்குடைகளில் 100% வாக்களிப்பு குறித்து விழிப்புணர்வு: சென்னை மாநகராட்சி தகவல்




**சென்னை, ஏப்.02:** சென்னையில் ஆயிரம் பேருந்து நிறுத்த நிழற்குடைகளில், 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

இது குறித்து, மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளிலும், வாக்காளர்கள் வாக்களிப்பதை உறுதி செய்திடும் வகையில், வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, சென்னை மாவட்டத்தில் 13 எல்இடி தொலைக் காட்சிகளுடன் கூடிய தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து, வீடுகள் தோறும் திடக் கழிவுகள் சேகரிக்கும் பேட்டரியால் இயங்கக் கூடிய மூன்று சக்கர வாகனங்கள், காம்பாக்டர் பெரிய வாகனங்கள் மற்றும் அரசு பேருந்துகளில் 'நம்ம தங்கா' எனும் காகம் சின்னத்தை மையப்படுத்தி தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள், எனது வாக்கு எனது உரிமை என்ற சுயபுகைப்பட பதாகை, கடற்கரையில் மணற் சிற்பம், பொம்மலாட்ட நிகழ்ச்சி, பாரா க்ளைடிங், மனிதச் சங்கிலி, ரங்கோலி, நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் விழிப்புணர்வு கரகாட்டம், கானா பாடல்கள், கும்மிபாட்டு, தப்பாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள், திடீர் குழு நடனம் மற்றும் தேர்தல் தொடர்பான விநாடி வினா, கையெழுத்து இயக்கம் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 1,000 பேருந்து நிறுத்த நிழற்குடைகளில் 'நம்ம தங்கா' எனும் காகம் சின்னத்தை மையப்படுத்தி தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அயனாவரம் தவெக பொதுக்கூட்டத்தில் மது பாட்டில் வீசப்பட்டதால் பரபரப்பு



**சென்னை, ஏப்.02:** அயனாவரத்தில் நேற்று நடைபெற்ற தவெக பொதுக்கூட்டத்தில் மது பாட்டில் வீசப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. தமிழக வெற்றிக் கழகம் சார்பில் வில்லிவாக்கம் தொகுதியில் போட்டியிடும் ஆதவ் அர்ஜுனா, அயனாவரம் பகுதியில் நேற்று பொதுக்கூட்டம் நடத்தி வாக்கு சேகரித்தார்.

இந்த பொதுக்கூட்டத்தில் கொளத்தூர் வேட்பாளர் வி.எஸ்.பாபு, ஆயிரம் விளக்கு வேட்பாளர் ஜேசிடி.பிரபாகர், நாஞ்சில் சம்பத் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் பேசிக் கொண்டிருக்கும் போது அருகில் இருந்த அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து மது பாட்டில் கூட்டத்துக்கு நடுவே வீசப்பட்டது. இதில் கூட்டத்தில் இருந்த பெண் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது.

இதனால் அங்கே பரபரப்பு ஏற்பட்டது. காயமடைந்த பெண் மருத்துவ மனைக்கு அழைத்து செல்லப்பட்டார். உடனடியாக காவல்துறை விசாரணை நடத்தி குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் வரை நான் இங்கிருந்து புறப்பட மாட்டேன் என ஆதவ் அர்ஜுனா மேடையில் பேசியதால் மேலும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து போலீஸார் அருகில் இருந்த அடுக்குமாடி குடியிருப்புக்கு சென்று விசாரணை மேற்கொண்டர். அப்போது சந்தேகத்தின் பேரில் இருவரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

## மதிமுக 4 வேட்பாளர்களும் உதய சூரியன் சின்னத்திலேயே போட்டி: வைகோ

**சென்னை, ஏப்.02:** சீர்காழி தொகுதி மதிமுக வேட்பாளரும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார். முன்னர், ஒரு தொகுதியில் மட்டும் தனிச் சின்னத்தில் போட்டியிடுவோம் என்று வைகோ கூறியிருந்த நிலையில் இந்த முடிவை அவர் நேற்று அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026, ஏப்ரலில் நடைபெற இருக்கும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி தி.மு.கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்றான சீர்காழி (தனி) தொகுதியிலும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இரா.செந்தில்செல்வன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பதை தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் மதிமுக தனக்கு ஒதுக்கப்பட்ட 4 தொகுதிகளிலுமே உதய சூரியன் சின்னத்திலேயே போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்துடன் மொத்தம் 176 தொகுதிகளில் உதய சூரியன் சின்னம் களம் காண்கிறது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் உள்ள மதிமுகவுக்கு மொடக்குறிச்சி, மதுரை தெற்கு, கடையநல்லூர், சீர்காழி (தனி) ஆகிய 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு 28, தேமுதிகவுக்கு 10, விசிக-வுக்கு 8, கம்யூனிஸ்ட்கள் தலா 5, கொமதேக-2, மதிமுக -4, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மமக-வுக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் எஸ்டிபிஐ உட்பட சில சிறிய கட்சிகள் திமுகவின் உதய சூரியன் சின்னத்தில் தலா ஒரு தொகுதியில் களமிறக்கப்பட உள்ளன.




## இனி வீடியோ மூலம் பிரச்சாரம்: விஜய் திடீர் முடிவு

**சென்னை, ஏப்.02:** கொளத்தூர் பரப்புரையில் ஏற்பட்ட அனுபவங்களைத் தொடர்ந்து, தவெக தலைவர் விஜய் தனது தேர்தல் பிரச்சார வியூகத்தை மாற்றியமைக்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


இதுகுறித்து தவெக வட்டாரங்கள் கூறியதாவது: விஜய் நேற்று முன்தினம் பெரம்பூர் தொகுதியில் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து பெரம்பூர், கொளத்தூர் மற்றும் வில்லிவாக்கம் தொகுதிகளில் அவர் பிரச்சாரம் செய்யத் திட்டமிட்டிருந்தார். ஆனால், கொளத்தூர் தொகுதியில் அவர் பிரச்சாரத்தைத் தொடங்கியபோதே கூட்டம் கட்டுக்கடங்காமல் திரண்டதால் அப்பகுதியே ஸ்தம்பித்தது.

கடும் போக்குவரத்து நெரிசலில் வாகனம் ஊர்ந்து சென்றதால், அவரால் பிரச்சாரத்தை தொடர முடியவில்லை. பாதியிலேயே பிரச்சாரத்தை ரத்து செய்துவிட்டு வீடு திரும்பினார். காவல்துறை தரப்பில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததே இதற்குக் காரணம்.

இனி வரும் நாட்களிலும் இது போன்ற சிக்கல்கள் வரலாம் என்பதால் இனிமேல், 'வீடியோ வடிவிலான' பிரச்சாரத்தை முன்னெடுக்க விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். ஒவ்வொரு தொகுதியின் வேட்பாளர் குறித்தும், அங்கு நிலவும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்தும் விஜய் பேசிப் பதிவு செய்யப்பட்ட வீடியோக்கள் ஏற்கெனவே தயார் நிலையில் உள்ளன.

இதை அந்தந்த தொகுதிகளில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பெரிய திரைகளில் ஒளிபரப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. முக்கியமான தொகுதிகளுக்கு மட்டுமே நேரில் செல்லத் திட்டமிடும் விஜய், மற்ற இடங்களுக்கு வீடியோ பிரச்சாரமே போதும் என நினைக்கிறார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## புதிய தமிழகம், ராமதாஸ் 2-வது வேட்பாளர் பட்டியல்



**கோவை/விழுப்புரம், ஏப்.02:** புதிய தமிழகம், ராமதாஸ் அணி சார்பில் 2-வது வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியானது. தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் போட்டியிடும், இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி கோவையில் நேற்று வெளியிட்டார்.

அதன்படி, ராஜபாளையம்-மு.ரமாதேவி, சிவகாசி - க.காளீஸ்வரி, அருப்புக் கோட்டை - கி.ரகுபதி, திருச்சுழி - கு.குணசேகரன், தூத்துக்குடி - ரா.ரமேஷ், முதுகுளத்தூர் - ச.மலைச்செல்வம், திருவாடனை - சிவ.பாலுச்சாமி, திருவையாறு - வ.வேணு, தாராபுரம் - மா.சின்னசாமி, திண்டுக்கல் - மா.பிரதீப் பாண்டியன், ஆலங்குளம் - அ.உதயக்குமார், பெரம்பலூர் - த.வெங்கடேசன், அந்தியூர் - தா.பெரியசாமி, பல்லாவரம் - அ.தங்கராஜ், ஆலந்தூர் - ஆ.வேலுச்சாமி, பழநி - கு.வாய்க்கால்துரை, லால்குடி - இளஞ்செழியன், மணச்சநல்லூர் - மு.பாலு, ஸ்ரீரங்கம் - ஆ.நியூட்டன், திருச்சி மேற்கு - கோ.சண்முகம், துறையூர் - த.ராஜமாணிக்கம், கே.வி.குப்பம் - கு.கந்தன், மடத்துக்குளம் - க.செந்தில்குமார் உள்ளிட்ட 27 பேர் போட்டியிடுகின்றனர்.

ராமதாஸ் அணி

இதேபோல் பாமக (ராமதாஸ் அணி) வெளியிட்ட 2-வது பட்டியலில் திருப்போரூர்- ஏகாம்பரம், உத்திரமேரூர் - ஸ்ரீதர், கும்மிடிப் பூண்டி- சங்கர், திருவள்ளூர்- வெங்கடேசன், செஞ்சி- கனல் பெருமாள், தருமபுரி- சரவணன், ஜெயங்கொண்டம்- காடுவெட்டி ரவி, செய்யாறு -சீனிவாசன், அந்தியூர்- கோபால், புவனகிரி- பாலமுருகன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## "வாஜ்பாயை நிலையான ஆட்சி கொடுக்க வைத்த கட்சி திமுக" - சீமான் விமர்சனம்

**சென்னை, ஏப்.02:** தமிழகத்தில் பாஜக வேரூன்ற திமுக தான் காரணம், மத்தியில் பிரதமராக இருந்த வாஜ்பாயை நிலையான ஆட்சி கொடுக்க வைத்த கட்சி திமுக என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னை விமான நிலையத்தில், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தவெக தலைவர் விஜய் மீது வழக்கு பதிவு செய்தது பற்றி எனக்குத் தெரியாது. பாதுகாப்பு குறைபாடு என்று கூறுகின்றனர். களத்தில் நின்ற விஜய்க்கு தான் அது பற்றி தெரியும். நான் காவல்துறையிடம் பாதுகாப்பே கேட்பதில்லை. அதை எதிர்பார்ப்பதும் இல்லை.

அதனால் எனக்கு அந்த பிரச்சினை இல்லை. என்னை பாஜகவின் பி-டீம் என்கின்றனர் திமுகவினர். ஆனால் பாஜகவின் ஏ-டீமே திமுக தான். இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் வாக்குகளை தக்க வைப்பதற்காக, வருபவன் போகிறவனை எல்லாம், பி-டீம் என்று கூறுகின்றனர்.

தமிழகத்தில் முதன்முதலாக பாஜக ஆழமாக வேரூன்ற காரணமாக இருந்த கட்சி யார்? பாஜக நிர்வாகி எச்.ராஜாவை முதன்முதலில் சட்டப்பேரவைக்கு அழைத்து சென்றது யார்? மத்தியில் பிரதமராக இருந்த வாஜ்பாயை 5 ஆண்டு காலம் நிலையான ஆட்சி கொடுக்க வைத்த கட்சி எது? எல்லாமே திமுகதானே.

எங்கள் கட்சியில் 90 சதவீத மக்கள் இந்துக்கள் தான் என்று திமுக கூறுகிறது. பாஜகவுக்கு அடுத்ததாக 90 சதவீத இந்துக்களுடன் இருக்கும் திமுக, பாஜகவின் ஏ-டீமாகத்தானே இருக்க முடியும்.

திராவிடக் கட்சிகள் அறிவிப்பது, தேர்தல் வாக்குறுதிகள் அல்ல. அதன் பெயர் இலவச அறிவிப்பு. நான் ரூ.2000 கொடுக்கிறேன், ரூ.2500 கொடுக்கிறேன் என்கிறார்கள். ஒருவர் மூன்று சிலிண்டர் என்கிறார். இன்னொருவர் 6 சிலிண்டர் என்கிறார். எங்கிருந்து கொடுப்பார்கள்?

ஏன் என் மக்களை இப்படி ஏமாற்றுகிறார்கள்? இதையெல்லாம் கொடுத்தால் காவல்துறை, அரசு மருத்துவர், செவிலியருக்கு கொடுக்க சம்பளம் இருக்காது. சொந்த நாட்டுக்கு கடனை வைத்துவிட்டு செல்பவன் நல்ல தலைவனாக இருக்க முடியாது. அதேபோல் மதுவை திறந்து விட்டு விட்டு சட்டம் - ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு பற்றியெல்லாம் பேசுவதும் வீண்.இவ்வாறு அவர் கூறினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM